Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 11 செவ்வாய்க்கிழமை (27.12.2011) பக்கங்கள் 16 ஓசை - 87


இலங்கையின் முதல்வன் (07)


தடுக்கத் தயார் (08)


கிறிஸ்மஸ் தினத்தில் (13)


பொங்கலுக்குத் தயார் (06)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஐ.தே.க.,கூட்டமைப்பு முட்டுக்கட்டை

## அரசாங்கம் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.வும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முட்டுக்கட்டைகளைப் போட்டு வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்பாக அமைச்சர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்துள்ளதாவது, இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எனினும், இந்தத் திட்டத்திற்கு பிரதான எதிர்க் கட்சிகளான ஐக்கிய தேசியக்

(15ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் கடல் நீர் உட்புகுந்தது மக்கள் அச்சத்துடன் இடப்பெயர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக் கடற்கரைப்பகுதியில் நேற்றிரவு ஒன்பது மணியளவில் திடீரெனக் கடல்பெருக்கெடுத்து ஊர்மனைகளுக்குள் புகுந்து கொண்டதால் மக்கள் உயிரைக் கையில் பிடித்தபடி இடம்பெயர்ந்து வருகின்றனர். அளம்பில், உடுப்புக்குளம், சிலாவத்தை, கள்ளப்பாடு,செம்மலை, முல்லைத்தீவு நகரம் என்பன இந்தக் கடற்பெருக்கால் பாதிப்புற்றுள்ளன. திபு திபுவென நேற்று மாலை கரையை நோக்கி வந்த கடலைப் பார்த்து மக்கள் அச்சம் கொண்டனர். அதுவும் ஆழிப்பேரலை ஏற்பட்டு ஏழாம் ஆண்டு நிறைவு நாளில் இவ்வாறு கடல் பெருக்கெடுத்ததால் மீண்டும் சுனாமி ஏற்பட்டு விட்டதாகப் பயந்து கையில் அகப்பட பொருள்களுடன் பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் நகர்ந்து சென்றனர். இதனால் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உட் புகுந்த கடல்நீர் வற்றாமல் முழங்கால் அளவுக்கு நேற்று இரவு இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கரையில் இருந்து சுமார் 250 மீற்றர் வரை உள்வந்து நிற்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. (04)

### சந்திரகுமார் எம்.பி.யின் ஏற்பாட்டில்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவில் கடந்த வருடம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 2900 குடும்பங்களுக்கு தலா இருபத்தையாயிரம் ரூபா வீதம் இழப்பீடு இன்றைய தினம் வழங்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பரந்தன் குடியிருப்பு மக்களுக்கு நேற்றைய தினம் வெள்ள நிவாரணப்பொருட்களை வழங்கி வைத்து கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தினம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொள்கின்ற அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க உத்தியோகபூர்வமாக இவ் இழப்பீட்டுத்தொகையினை வழங்கி வைப்பார் எனவும் தெரிவித்தார். (29)

# அரசு-கூட்டமைப்பு பேச்சு விரைவில் முறிவடையலாம்

## கூறுகிறார் செல்வம் எம்.பி.

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேசிப் பயனில்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் முறிவடையலாம் எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இதனால் தமிழ் மக்கள் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பாகவும் சர்வதேச சமூகத்திடமும், ஐக்கிய நாடுகள் சபையிடமும் முறையிடுவதைத் தவிர வேறு வழிவகை இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிடுவதன் மூலம் மக்களை ஒன்றிணைத்து, ஜனநாயக ரீதியில் போராட்டங்களை நடத்த சந்தர்ப்பம் ஏற்படும். அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இதுவரை நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், ஸ்ரீலங்கா சுதந்திரக்

(15ஆம் பக்கம் பார்க்க)

# மீள்குடியேறிய மக்களின் தேவை அமைச்சர் டக்ளஸ் நேரில் ஆய்வு



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் அண்மையில் மீள் குடியேற்றப்பட்ட மக்கள் எதிர் நோக்கும் பல்வேறு விதமான நெருக்கடிகள் மற்றும் வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டறிந்து கொண்டார்.

சுன்னாகத்திலுள்ள ஈ.பி.டி.பி.யின் வலி.தெற்கு பிரதேச பணிமனையில் நேற்றைய தினம் மக்களைச் சந்தித்தபோதே அமைச் சர் மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுகளையும் விரைவில் பெற்றுத் தருவதாக உறுதியளித் தார்.

வலி.வடக்கு பகுதிகளில் எஞ்சியுள்ள இடங்களுக்காக மீள் குடியேற்றம், மீள்குடியேறிய மக்களுக்கான மின்சாரம், குடிநீர், வீட்டுத்திட்டம், மலசல கூடம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் குறித்து அமைச்சரிடம்

(15ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் நிரப்பிய வேளை மோ.சைக்கிள்கள் எரிந்து நாசம்



(திருநெல்வேலி)

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் நிரப்பிக் கொண்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் திடீரென தீப் பற்றிக் கொண்டதில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் எரிந்ததுடன் மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகினர்.

கல்வியங்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் எரிபொருள் விற்பனை நிலையத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று மாலை 4.30 மணியளவில் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை நிரப்பிக் (15ஆம் பக்கம் பார்க்க)

## திருத்தப்பட்ட பெறுபேறு இணையத்தளத்தில்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலான மாவட்ட மற்றும் தேசிய ரீதியிலான குளறுபடிகள் நிவர்த்தி செய்யப் பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். இதன்படி திருத்தப்பட்ட பெறுபேறுகள் மீண்டும் நேற்று மாலை இணையத்தில் சேர்க்கப் பட்டுள்ளதாகவும் அவற்றை www. doenets.lk என்ற முகவரியில் பார்வையிடலாமெனவும் அவர் (15ஆம் பக்கம் பார்க்க)

# விசேட கைதிகளுக்கு பொதுமன்னிப்பு விடுதலையாவாரா பொன்சேகா?

(கொழும்பு)

விசேட கைதிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளார். இதன் அடிப்படையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் விடுதலை செய்யப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குற்றச் செயல்களின் காரணமாக ஆயுள் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் உள்ளிட்ட விசேட கைதிகளுக்கு மன்னிப்பு வழங்குவது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நன்னடத்தை அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலையைச் சேர்ந்த கைதிகளினால்

(15ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறையில் பிரியம் தோன்றுவது ஏன்? உளமருத்துவ நிபுணரின் சமூக நோக்கு



அதிகாரப் போட்டிகளில் ஈடுபடுவோரே அதிகம் வன்முறைகளில் ஈடுபடுகின்றார்கள். இவர்கள் அதிகாரத்திற்காகத்தான் சண்டை பிடிக்கின்றார்கள். வன்முறையில் ஈடுபடுபவர்கள் அதற்குப்பழக்கப்பட்டு அதில் விருப்புடையவர்களாக காணப்படுகின்றனர் என உளமருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன் தெரிவித்துளளார்.

பெண்கள் வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ் மாவட்ட செயலகமும் பால்நிலை வன்முறைக்கெதிரான நிறுவனமும் இணைந்து நடாத்திய ஊடகவியலாளருக்கான கருத்தரங்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதனால் ஏற்படும் உளசமூக பிரச்சனைகளும் என்னும் தொனிப் பொருளில் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர் வன்முறையால் பாதிகசுப்படும் பெண்கள் மெதுமெதுவாக தமது தன்னம்பிக்கையை இழக்கின்றனர். இது அவர்களுடைய ஆளுமையைக் குறைப்பதுடன் அவர்களை நிரந்தர மனநோயாளிகளாகவும் மாற்றுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வொன்றில் 60 வீதமான பெண்கள் வீட்டு வன்முறைகளின போது கணவன் மனைவி இருவருமே பாதிக்கப்படுவதுடன் பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆண்களில் தங்கி இருக்கின்ற பெண்களே இவ்வாறான வீட்டு வன்முறைகளால் பெரிதும் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்ட உளநல மருத்துவ நிபுணர் இவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் தன்னம்பிக்கையை இழந்து ஆளுமை வளர்ச்சி குறைவதால் நிரந்தர நோயாளிகளாகவும் மாறுகின்றனர்.

அத்துடன் ஒருவரைச் சித்திரவதைக்குள்ளாக்கும் நபரின் நோகம் அவரின் இயல்பான ஆளுமையைக்குறைப்பதாகும். வன்முறைகள் உடல் உள ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வளர்ச்சியைக் குறைக்கின்றது. இப்படியான சம்பவங்கள் அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் காணககூடியதாக உள்ளது.

அதிகாரப் போட்டிகளில் ஈடுபடுவோரே அதிகம் வன்முறைகளில் ஈடுபடுகின்றார்கள். இவர்கள் அதிகாரத்திற்காகத் தான் சண்டை பிடிக்கின்றார்கள். வன்முறையில் ஈடுபடுபவர்கள் அதற்குப்பழக்கப்பட்டு அதில் விருப்புடையவர்களாக காணப் படுகின்றனர்.


வன்முறையின் மூலம் இருசாராரும் உளநெருக்கீட்டுக்கு உட்படுகின்றனர். வீட்டு வன்முறைகளின போது வளரும் பிள்ளைகள் அவறைப் பார்வையிட்டு எதிர்காலத்தில் மிகவும் மோசமான வன்முறையாளனாக உருவெடுக்கும் அபாயம் காணப்படுகின்றது.

தற்போது மற்றவர்களுடைய உரிமைகள், நலன்கள் தொடர்பில் அக்கறை இல்லாத ஒரு சமூகம் உருவாகிக்கொண்டு வருகின்றது. இந்நிலை மாறி சமூகம் விழிப்படைய வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (எஸ்)

# இலக்கியப் போட்டிகள் நாளை வேம்படியில்

யாழ்ப்பாணத் திருவிழாவை முன்னிட்டு தமிழர் பண்பாட்டு விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட தலைப்பில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் என்பதைப் போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம் என யாழ். மாநகரசபை முதல்வர் அறிவித்துள்ளார்.

# யாழில் முதலிடம் பெற்ற சஞ்சயன் மனம் திறந்து...



(யாழ்ப்பாணம்)

யாழ்/சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ச.சஞ்சயன் ஆனந்த நடராாஜா 2011 ஒகஸ்ட் நடைபெற்ற க.பொ.த. உயர்தர உயிரியல் பிரிவில் 3ஏ பெற்று யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தினையும் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் முதலாம் இடம்பெற்ற மேற்படி மாணவன் தினமுரசுக்கு அளித்த பேட்டியில்,

நான் தரம் 6 முதல் இப்பாடசாலையில் கல்வி பயின்று வருகின்றேன். நான் ஆர்வத்தோடு உயிரியல் பிரிவில் கற்றேன். எனது கல்வி வளர்ச்சிக்குப் பெற்றோர் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்கள எனப் பலரும் ஊக்கமளித்தனர்.

எதிர்காலத்தில் சிறந்த வைத்தியராக வேண்டும், மக்களுக்கு மருத்துவ சேவை செய்யவும் நான விரும்புகின்றேன் என்றார். (எஸ்)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக வாரத்திற்கு 500 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் வாகனப் பதிவு சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் விண்ணப்பம் செயதல் போன்ற தேவைக்ளுக்காகத் தினமும் வருவோர் அதிகரித்துள்ளது.

திணைக்களத்தின் ஒரு பக்க யன்னலூடாக நடைபெற்றுவரும் இச் செயற்பாடுகளின் ஊடாக வாரத்திற்கு ஐந்நூறு பேர்வரை சாரதி அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்து செய்முறைப் பரீட்சையில் தகுதி பெற்றவர்களுக்கு அனுமதிப் பத்திரம் ஒன்று வழங்கப்படுகிறது. பதினெட்டு மாதகாலம் இது செலலுபடியாகும். அதற்குள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள கொழும்புத் தலைமைய கத்திலிருந்து சாரதி அனுமதிப்பத்திரம் கிடைத்துவிடுகிறது. சகல வீதிகளிலும் போக்குவரத்துப் பொலிஸாரின் சோதனை நடவடிககைகள் இடம்பெறுவதால் காப்புறுதி, வரிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பதிவுகள் மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட காரியாலங்களில் சாரதிகள் பெருமளவில் காணப்படுகின்றனர். (137)

# கலந்துரையாடல்

யாழ். மாநகர சபையால் நடாத்தப்படும் மக்கள் பற்கேற்புடனான மக்கள் தேவைகள் தொடர்பான கிராம அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம் ஜே/93 கிராம சேவையாளர் பிரிவில் இன்று செவ்வாய் கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். அரியாலை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. எனவே மேற்குறிப்பிடப்பட்ட பிரதேசவாழ் மக்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றித் தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான யோசனைகளை வழங்குமாறு யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது.

# ஸ்ரான்லிக் கல்லூரி மாணவி வர்த்தகப் பிரிவில் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய (ஸ்ரான்லிக் கல்லூரி) மாணவி ஆராஅமுதன் சிவாஜினி 2011 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் 3ஏ சித்திபெற்று யாழ். மாவட்ட மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.




## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1041)


# வடபிராந்திய சாலைகளுக்கு புதிய பஸ் தருவிப்பு

நாட்டில் பஸ் போக்குவரத்தை இலகுவாக்கும் பொருட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை இருநூற்றைம்பது புதிய பஸ்களை இறக்குமதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, காரைநகர், பருத்தித்துறை, மன்னார் போன்ற சாலைகளுக்குத் தலா இரண்டு பஸ்களும், வவுனியா சாலைக்கு ஐந்து பஸ்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

நடந்துமுடிந்த சாதாரண தரப் பரீட்சைப் பரிட்சார்த்திகளுக்காக யாழ்.சாலை பரீட்சை நாட்களில் முப்பத்தாறு பஸ்களை சேவையில் ஈடுபடுத்தியது. பாடசாலை சேவைக்காகத் தினமும் நாற்பது பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன என வடபிராந்திய போக்குவரத்து சபை பொதுமுகாமையாளர் கே.கணேசபிள்ளை தெரிவித்தார். பருத்தித்துறை சாலையிலிருந்து ஐந்து பஸ்கள் பாடசாலை சேவையை நடாத்துகின்றன. பொதுமக்களுக்கான பஸ் சேவையைச் சீரான ஒழுங்கு முறையில் நடாத்தி போக்குவரத்தை இலகுபடுத்துவதே வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் இலட்சியம் என பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.(137)

# புத்தாண்டு தினத்தை முன்னிட்டு விடுமுறையற்ற வியாபாரம்

(சாவகச்சேரி)

எதிர்வரும் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பகுதி வர்த்தக நிலையங்கள் பொது விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கத்தின் எல்லைக் குட்பட்ட வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும் முகமாகக் குறிப்பிட்ட தினங்களிலும் திறந்து வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் வ.ஸ்ரீ பிரகாஷ் அறிவித்துள்ளார். (11)








## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முனகூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)

வாழ்க்கையை நாம் எண்ணிய அளவு நீட்டிக் கொண்டு போக முடியாது. ஆகவே இன்னும் இருக்கும் நாட்களை உங்கள் முன்னேற்றத்திற்காகவும், மற்றவர்களுடைய நலனிற்காகவும் விரைந்து பயன்படுத்துங்கள்.

*- மகாவீரர்.*

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## முன்னோர் விட்டுச் சென்றதும், நாம் விட்டுச் செல்வதும்

"ஒரு குழந்தை நல்லபடியாக வளர்ந்து முன்னேற வேண்டும் என்றால் மூன்று பேர் முக்கியம். அம்மா, அப்பா, ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர். அந்தக் குழந்தையின் பிற்கால வாழ்வுக்கு வேண்டிய நல்ல குணங்களை இவர்களால் தான் ஊட்ட முடியும். மூவரும் சேர்ந்து பதினைந்து வயதுக்குள் ஒரு குணமான பிள்ளையாக மாற்றாவிட்டால் பிறகு கடவுளோ, பிசாசோ, எந்த அரசுச் சட்டமோ அவர்களை மாற்ற முடியாது" என்பார்கள்.

இதற்கு, பள்ளிக்கூடங்களில் வெறும் பாடப்புத்தகங்களுக்கு மேலதிகமாக வாழ்வுக்கான கல்வி வழங்குவதற்கும் பாட நேரங்கள் ஒதுக்கியாக வேண்டும். சமூகத்துடனான உறவும் அக்கறையும் ஊட்டக்கூடிய வகுப்புகள் ஏற்படுத்தப்படாவிட்டால், இன்றைய தொழினுட்ப வளர்ச்சியும் ஆற்றலும் சிறுவர்களை முரட்டுத்தனமான திசைகளிலேயே எடுத்துச் சென்றுவிடும்.

ஏற்கெனவே மேல்நாட்டு வளர்ச்சிகள் நாகரிகங்களுக்கு ஏற்ப நம் சிறுவர்களை பணம் ஈட்டும் கல்விக்கே விரட்டி விரட்டி வளர்த்துக் கொண்டிருக்கிறோம். வெளிநாட்டுப் பொருட்கள் மீதான மோகமும், வெளிநாடுகளுக்கே சென்றுவிடும் நோக்கமுமாகத்தான் நம் பிள்ளைகள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய நாடு, நம்முடைய பொருட்கள், நம்முடைய தேவைகள், நம்முடைய வாழ்வு என்று பலவற்றை அவர்களுக்கு அடிப்படையிலிருந்தே சொல்லித்தர வேண்டியிருக்கிறது. நம்முடைய பாரம்பரிய பாவனைப் பொருட்கள், உணவுப்பழக்கம் போன்றவற்றையும் தனியாகக் கற்றுத்தர வேண்டியிருக்கிறது. செயற்கைக்கும், சுலபத்திற்கும், நாகரிகத்திற்குமாக நாம் பல்வேறு நஞ்சுகளைச் சூழலில் அனுமதித்தும் உட்கொண்டும் வருகிறோம்.

அன்னியக் கலாசார உணவு வகை எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி நுழைவது பற்றி நம்மிடம் எந்த ஆய்வுகளோ கவனமோ இல்லை. குழந்தைகளுக்கான சொக்ளேற் என்ற விஷ உருண்டையிலும், புத்துணர்ச்சி ஊட்டும் கொக்கோவிலும் மாரடைப்புக்கான காரணி "தியோபுரோமின்" என்ற பெயரில் பவ்வியமாக ஒளிந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதிலுள்ள ட்ரிப்டோ.ஃ.பான், கா.ஃ.பீன் எல்லாமே அளவு குறைந்த நச்சுகள்.

சருமத்தின் மினுமினுப்புக்குப் பூசும் களிம்புகளில் மினரல் எண்ணெய், கொல்லாஜன் ஆகியவற்றால் வியர்வைத் துவாரங்கள் அடைபடும். தோல் அழற்சி உண்டாகும். சில உதட்டுச் சாயங்களில் உள்ள அக்டோ மற்றும் டெக்கா மீத்தைல் – சைக்ளோ – டைட்ரா – சிலாக்சேன்கள், நகச் சாயத்தின் டைபியூட்டைல் தாலேற் ஆகிய இரசாயனங்களால் கர்ப்பப் பையில் கோளாறுகள் உண்டாகலாமாம்.

அக்குளில் வியர்வை மணம் போக்கத் தெளிக்கும் வாசனை மருந்தில் "பாராபென்" ரக இரசாயனப் பொருள் உள்ளது. இது மார்பகப் புற்றுநோய்க்குக் காரணமாகும்.

தரை கழுவும் திரவத்தில் அடங்கிய சோடியம் லோரைல் சல்பேற்தான் நாங்கள் பல்துலக்கும் பற்பசையிலும் உள்ளது. இது நுரையீரல், மூளையைப் பாதிக்கும். இப்படிப் பல பல ஆபத்துகளை நாம் விரும்பியே விலைக்கு வாங்குகிறோம், தவிர்க்க முடியாமல் திண்டாடுகிறோம்.

வீடோ, நாடோ அயலானை நேசிப்பதில் தவறில்லை. நேசிக்க வேண்டும். ஆனால், வேலியை அகற்றி தாராளமாய் உள்ளே வரவிடுவதில் கவனம் தேவை. விளைச்சலைப் பெருக்கி வை, நாங்கள் வந்து விற்றுத் தருகிறோம் என்றே அவர்கள் உதவிகளைச் செய்துவருகிறார்கள்.

இனி ஒரு விதி செய்வோம். பள்ளிக்கூடங்களில் சில வகுப்புகளாவது சமூகப்பிரச்சினைகள் பற்றி அறிவூட்டும் பாடநேரங்களாக வேண்டும். தொடர்ந்தும் அந்நிய மோகத்துடனும், வன்முறை உணர்வுகளுடனும், சமூகமுன்னேற்றம் பற்றிய கவனமின்றியும் விட்டேற்றித்தனமாக ஏட்டுக்கல்வியுடன் மட்டுமே பிள்ளைகளை வளர்த்துக்கொண்டிருக்க வேண்டாம்.

நமது தாய் தந்தையருக்கு அவர்களது முன்னோர் விட்டுச் சென்றிருந்த சமூகம் அல்ல, எமது பிள்ளைகளுக்கு நாம் விட்டுச் செல்வது என்பதை ஒருகணம் நிதானமாகச் சிந்தித்தால் எவரும் புரிந்து கொள்ள முடியும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் கவனம் குவிக்க முடியும்.

*– ஆசிரியர்*

# சுனாமி தேசிய பாதுகாப்பு தினம் காத்தான்குடியில் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

சுனாமி தாக்கத்தினை மையப் படுத்தி வருடாவருடம் அனுஷடிக்கப்பட்டுவரும் தேசிய பாதுகாப்பு தினம் இவ்வருடம் மட்டக்களப்பு காத்தான்குடியில் மிகவும் உணர்வு பூர்வமாக நேற்று காலை 9.00 மணிக்கு அனுஷடிக்கப்பட்டது.

இலங்கையின் நாலா பக்கமும் இருந்து வந்த மேளதாள வாத்தியக் குழுக்கள், பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், முப்படைகளினரது பாண் வாத்தியங்கள் அரச, அரச சார்பற்ற அமைப்புக்களினதும் சுனாமி அனர்த்தத்தைப் பிரதி பலிக்கக் கூடிய வாகன ஊர்திகள், முப்படைகளினது அணிவகுப்புக்கள் என்பன மிகவும் சிறப்பாக இடம் பெற்றன.

இடர் முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் இவ் வைபவம் நடைபெற்றது.

பிரதமர் தி.மு. ஜயரத்ன, இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாண ஆளுநர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரமசிங்க பிரதியமைச்சர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா மற்றும் பசீர் ஷேகுதாவூத், விநாயக மூர்த்தி முரளிதரன், உட்படப் பலர் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது பிரதம மந்திரி தேசியக் கொடியையும், கிழக்கு மாகாண கொடியினை கிழக்கு மாகாண முதலமைச்சரும், அனர்த்த முகாமைத்துவ கொடியினை இடர் முகாமைத்தவ அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட கொடியினை பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவும் ஏற்றி வைத்தனர்.

இதனையடுத்து சுனாமி மற்றும் அனர்த்தங்களின் போது உயிர் நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி நடைபெற்றது.

இதையடுத்து முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதை மற்றும் பாடசாலை மாணவர்களின் அணி நடை, கலை கலாசார நிகழ்ச்சிகள் என்பன இடம் பெற்றன. ஹிஸ்புல்லா கலாசார மண்டபத்திற்கு முன்னா லுள்ள காத்தான்குடி பிரதான வீதியில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளையடுத்து ஹிஸ்புல்லா கலாசார மண்டபத்தில் இதையொட்டிய வைபவம் நடைபெற்றது.

## யாழில் டெங்குநோயினால் 218 பேர் பாதிப்பு

(கொழும்பு)

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையானது டெங்கு நோயின் தாக்கம் பற்றிய விபரத்தை வெளியிட்டுள்ளது.

இதில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரை 365 பேருக்கு டெங்கு நோய் இனம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 218 பேர் டெங்கு நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது

இவர்களில் கடந்த ஜனவரி மாதம் மட்டும் 60 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

# யாழ்ப்பாண தொல்லியல் வரலாற்றை பாதுகாப்பது அனைவரின் கடமை

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழின் தொல்லியல் வரலாற்றுக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை யாழில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களுக்கு இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் என்ன நடந்தாலும் அதை விமர்சிப்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் காய்க்கிற மரத்தில் தான் கல்லெறி. விமர்சனங்களை ஏற்றுக் கொண்டு நாங்கள் எங்கள் குறைகளைத் தெரிந்து கொள்வது நல்லதென யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரெட்ணம் தெரிவித்துள்ளார்

யாழ்.பல்கலைக்கழக கைலாச பதியரங்கில் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண வாழ்வியல் கண்காட்சியில் பங்களிப்புச் செய்த வரலாற்றுத்துறை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில், வெளிநாடுகளில் வாழும் எங்களின் உறவுகள் யாழ்ப்பாணத்தில் இருக்கும் போது யாழ்ப்பாணத்தின் அருமைபெருமை தெரியாதவர்களாக இருந்தார்கள். இப்போது இவ்வாறு இல்லை. உடனுக்குடன் யாழில் என்ன நடக்கிறது என்பதை அவதானித்து வருகிறார்கள்.

ஆனால் அவர்களின் பிள்ளைகள் யாழில் என்ன நடக்கிறது என்பது தெரியாமல் வாழ்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றுகளை கண்முன்னே காட்டி நிற்பவையாக யாழ்ப்பாண வாழ்வியல் கண்காட்சி அமைந்தது. இதற்கு யாழில் இருப்பவர்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஸ்பரெட்ணம், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி ஞானக்குமரன், பேராசிரியர் சிவசாமி, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# உயர்தரப் பெறுபேற்றில் குளறுபடி அமைச்சர் எஸ்.பி. பதவி விலக வேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்து

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான குளறுபடிகள் காரணமாக உயர்கல்வி அமைச்சர் இராஜினாமாச் செய்ய வேண்டுமென கொழும்பு மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

சிறந்த கொள்கைகளினால் ஆளப்படும் ஒரு நாட்டில், இதற்குப் பொறுப்பான அமைச்சர் உடனடியாக இராஜினாமா செய்திருப்பார். க.பொ.த. உயர்தரப்பரீட்சையானது எந்தவொரு பிள்ளையின் வாழ்விலும் ஒரு திருப்புமுனையாகும். அவர்களின் எதிர்காலம் இதில் தங்கியுள்ளது. ஆனால் அதிகாரிகள் இதனுடன் விளையாடுகின்றனர்.

இப்பரீட்சைப் பெறுபேறு வெளியீட்டில் ஏற்பட்ட தவறு இவ்வதிகாரிகளால் அண்மையில் ஏற்பட்ட முதலாவது தவறு அல்ல. எண்ணற்ற தடவைகள் இத்திணைக்களம் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. வினாப்பத்திரங்களில் தவறான வினாக்கள், கொள்கைகளை அமுல்படுத்தாமை, காலத்திற்கு ஒவ்வாத கொள்கைகள் போன்றவற்றுக்கு அரசாங்கம் நேரடிப் பொறுப்பாகும்.

தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் மாணவர்களின் எதிர்காலத்தை அச்சுறுத்தலுக்குள்ளாக்கும் செயற்பாட்டை அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொள்வது கேலிக்கிடமானதுஎனவும் அவர் கூறினார்.

இவ்வாறான நடவடிக்கைகளால் இளைஞர்கள் விரக்திக்குள்ளாகலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை ஏற்கவேண்டாம் எனக் கோரிக்கை

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை ஏற்றுக்கொள்ள வேண்டாமென பொதுமக்களை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இப்பரீட்சைப் பெறுபேறுகளை அரசாங்கம் மீளவும் மதிப்பீடு செய்ய வேண்டுமெனவும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் தரவரிசையில் பிழைகள் காணப்படுவதாக சுமார் 100 மாணவர்கள் தமக்கு தெரிவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பனை வள ஆராய்ச்சி நிலையம்

# புனரமைப்புப் பணிகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு



(கைதடி)

கைதடியில் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வரும் பனைவள ஆராய்ச்சி நிலையத்திற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விஜயம் மேற்கொண்டு அதன் புனரமைப்பு வேலைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

கடந்த கால யுத்தத்தால் பலத்த சேதமடைந்த கைதடியிலுள்ள பனை வள ஆராய்ச்சி நிலையம் தற்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பனை அபிவிருத்திச் சபையின் கீழ் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அதன் புனரமைப்புப் பணிகள் தொடர்பில் ஆராய்ந்தறியும் பொருட்டு அமைச்சர் அண்மையில் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்ட அமைச்சர் அது தொடர்பில் துறைசார்ந்தவர்களுடனும் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் விருந்தினர் விடுதி வாகனத் தரிப்பிடம் சுற்று வளாகத்தையும் பார்வையிட்டார்.

இதனிடையே கொழும்பு பத்திரமுல்லையில் அமையப் பெற்றுள்ளதைப் போன்று பனை வள ஆராய்ச்சி நிலையத்திற்கு முன்பாகவுள்ள அரச காணியில் தேசிய அருங்கலைகள் பேரவையின் உற்பத்திக் கூடம் மற்றும் விற்பனை நிலையத்தை அமைப்பதற்கும் இதன்போது அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதனூடாக உள்ளூர் கைத்தொழிலாளர்களின் ஆக்கப் பொருடகள் சந்தைப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தை மேம் படுத்துவதற்கும் வாய்ப்புகள் எட்டியுள்ளன.

இதன்போது பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் பொதுமுகாமையாளர் லோகநாதன் தேசிய அருங்கலைகள் பேரவைப் பணிப்பாளர் பூலோகசிங்கம் தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி சாந்தசீலன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வேலணை 780 இலக்க பாதை புனரமைக்கப்படுவது எப்போது?



(தீவகம்)

வேலணைப் பிரதான வீதியான 780 இலக்க பாதை கடும் மழையினால் மிகமோசமாக சேதமடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட இவ்வீதி முன்னர் சேதமடைந்திருந்த நிலையில் அண்மையில் பெய்த மழையினால் மேலும் சேதமடைந்து போக்குவரத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

குண்டும் குழியுமாக இவ்வீதி காணப்படுவதுடன் வெள்ளநீரும் ஆங்காங்கே தேங்கி நிற்பதால் வாகனங்கள் வெள்ள நீரை அடித்துக்கொண்டு செல்கின்றன. இதனால் வீதியால் பயணிக்கும் ஏனைய மக்கள் தாம் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியை ஓரளவேனும் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என பயணிகளும் அப்பகுதிப் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# இடம்பெயர்ந்தோர் நிவாரணம் 9 மாதங்களாக வழங்கப்படவில்லை

பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் கடந்த ஒன்பது மாதங்களிற்கு மேலாக வழங்கப்படாமல் இருப்பதால் தாம் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக இடம்பெயர்ந்த மற்றும் மீள்குடியேறிய மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஒருவேளை உணவிற்குக்கூட பல குடும்பங்கள் அவதியுறுவதாகவும் மீள்குடியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் பொருட்களின் விலையேற்றம் அதிகரித்துச் செல்லும் நிலையில் தமது வருமானம் போதாமையாக உள்ளது. அத்துடன் நாளாந்த வருமானம் 500 ரூபா பெறும் ஒரு குடும்பம் அன்றாட தேவைகளை, பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளுக்கும் போதாமையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு முதல் தமக்குரிய இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபரிடம் கோரிக்கை விடுப்பதாக இடம்பெயர்ந்த மற்றும் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் தெரிவித்துள்ளன. (எஸ்)

# வவுனியாவில் நத்தார் நிகழ்வுகள் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள்



(வவுனியா)

வவுனியாவில் நத்தார் தின நிகழ்வுகள் விமரிசையாக இடம்பெற்றன. வவுனியா இரம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் விசேட பூஜை ஆராதனைகள் நேற்று முன்தினம் அதிகாலை விசேட வழிபாடுகள் இடம்பெற்றதுடன் பல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் வழிபாடுகள் இடம்பெற்றிருந்தது.

இதேவேளை வவுனியாவைரவபுளியங்குளம் இள வேனில் பாலர் பாடசாலையில் விசேட நத்தார் நிகழ்வுகள் மாலை இடம்பெற்றது. எதிர்வரும் ஆண்டு பாடசாலைக்கு ஆண்டு ஒன்றிற்காக புகும் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுகளில் மாணவர்களின் விசேட செயற்பாடுகளும் இடம்பெற்றிருந்ததுடன் மாணவர்களுக்கான வங்கிகளில் சேமிப்பு வைப்புகள் ஆரம்பிக்கப்பட்டு புத்தகங்களும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வின் போது பெற்றோர்கள், ஆசிரியர்கள் முதலாம் ஆண்டு மாணவர்கள் கலந்து கொண்டனர். (125)

# அச்சுவேலி மத்திய கல்லூரியில் ஆரம்ப வகுப்புக்கு தனியான பிரிவு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதி முதல் புதிதாக செயற்படவுள்ளதாக யாழ்.கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக்கல்லூரி ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ளீர்க்கப்பட்ட காரணத்தால் ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் இணைந்த நிலையில் செயற்பட முடியாதென்ற அடிப்படை விதிக்கேற்ப ஆரம்பப்பிரிவு பிரிக்கப்பட்டு புதிதாக இயங்கவுள்ளது.

இம்மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களை உள்ளடக்கியதாக .புதிய பாடசாலையாக செயற்படவுள்ளது. இப்பாடசாலைக்கென புதிய பெயர் சூட்டப்பட்டு புதிய அதிபரின் தலைமையில் இயங்கவுள்ளதுடன் இதற்கான அனுமதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டிருப்பதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# பள்ளிவாசல் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல் நீண்டகாலத்துக்கு பின்னர் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. நான்கு மதங்களும் கலந்து வாழும் இப்பிரதேசத்தில் பல காலமாக புனரமைக்கப்படாமல் இருந்த முஸ்லிம் மக்களின் புனித ஸ்தலமான பள்ளிவாசல் அம்மக்களின் முயற்சியால் சில தினங்களுக்கு முன்னர் புனரமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டு புதுப் பொலிவுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.

# நல்லூர் கோட்டப் பாடசாலைகளின் அடுத்த வருடத்திற்கான திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

போதைப் பொருட்கள் பயன்பாடுகள் குறித்து பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் கூடிய கவனம் செலுத்துவதுடன் விழிப்புணர்வு ஊட்டும் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும் என நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி. மாணிக்கராசா தெரிவித்துள்ளார்.

நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான 2012 ஆம் ஆண்டிற்கான பாடசாலை திட்டமிடல் கூட்டம் கடந்த சனிக்கிழமை யாழ். சென் பெனடிற்க் பாடசாலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்தியை முன்னேற்றுவதுடன் மாணவர்களிடையே ஏற்படும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டபோதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பல திட்டங்கள் நல்லூர் கல்விக் கோட்ட பணிப்பாளரால் முன்வைக்கப்பட்டது. அவை பின்வருமாறு:

♦ 2012ஆம் ஆண்டு முதல் தரம் 1 மற்றும் 6 ஆம் தரத்தில் 35 மாணவர்களே அனுமதிக்கப்பட வேண்டும். 35 மாணவர்களுக்கு மேல் அனுமதிக்கக்கூடாது.

♦ பாடசாலை அனுமதிக்கான காசு மாணவர்களிடம் பெறக்கூடாது.

♦ பாடசாலை மாணவர்களை சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லும் முன்பு உரியவர்களிடம் அனுமதி பெறப்படவேண்டும்.

♦ பாடசாலைகளில் விழாக்கள் கொண்டாடுவதற்கு உரிய அதிகாரிகளின் அனுமதி பெறப்பட வேண்டும்.

♦ பாட்சாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் அமர்த்தப்படக் கூடாது.

♦ 7 வருடத்திற்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றப்படவேண்டும்.

♦ 5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய அதிபர்கள் இடமாற்றப்பட வேண்டும். ♦ போதைவஸ்து மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்கு வாரம் தோறும் மாணவர்கள் குறித்து. கவனம் செலுத்தி சுத்தம் பேண வேண்டும்.

♦ பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் பாடசாலைகளில் அமைக்கப்பட வேண்டும். ♦ பாடசாலைகளில் ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உரியவர்களின் அனுமதியின்றி பணம் சேகரிக்கக்கூடாது.

♦ அரச நிதி பிரமாண சுற்றறிக்கைக்கு அமையவே பாடசாலை நிதிகள் செலவளிக்கப்படவேண்டும். ஆசிரியர்கள், மாணவர்களின் கைத்தொலைபேசி பாவனை பாடசாலைகளில் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

2012ஆம் ஆண்டு ஆசிரியர் வாண்மை விருத்தியிலும், மாணவர்களின் தேர்ச்சித் திறன் விருத்தியிலும் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும். அனைத்துச் செயற்பாடுகளும் 2012ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(எஸ்)

# பெற்றோர் சிறிய பாடசாலைகளிலும் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டும்

## யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரவீந்திரன்



(யாழ் நிருபர்)

அளவுக்கு அதிகமான மாணவர்களைக் கொண்டு இயங்கும் பெரிய பாடசாலைகளை விடுத்து ஆசிரியர் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தக்கூடிய வகையில் குறைந்தளவு மாணவர் களைக் கொண்டு இயங்கும் சிறிய பபடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்குப் பெற்றோர்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ் இளைய தம்பி இந்து வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்

கல்லூரி அதிபர் திருமதி வரதலட்சுமி கதிரேசப்பிள்ளை தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில பிரதம விருந்தினர் தொடர்ந்தும் பேசுகையில் மிகக் குறைவான பௌதீக மற்றும் மாணவர் வளங்களைக்கொண்ட இப்பாடசாலையில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் மாணவர்களைக் கௌரவிக்கின்ற, மாணவர்களின திறமைகளை வெளிபடுத்துகின்ற பரிசளிப்பு விழா சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்

நூற்றாண்டுப் பழமை மிக்க இப்பாடசாலை ஒரு சிறிய இடத்தில் குறைவான வளங்களுடன் இயங்கி இரண்டு மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற வைத்த துடன் ஆறு மாணவர் எதிர் பார்க்கின்ற தேர்ச்சி மட்டத் தினைப் பெற்றமை சாதனையாகும்.

இங்கு போதிய ஆசிரியர் வளம் இருக்கிறது.மாணவர் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அவர்கள் மீது தனிப்பட்ட கவனம் எடுத்து கோட்ட,வலய, மாவட்ட மட்டப் போட்டிகளில் முதனிலை பெற முடிகிறது. எதிர் காலத்தில் தேசிய மட்டத்திலும் இந்த மாணவர்கள் முதலிடங்களைப் பெறுவதற்குப் பெற்றோரும் ஆசிரியர்களும் ஊக்குவிக்க வேண்டும்.

ஒரு பாடசாலையின் அதிபர் நினைத்தால் பல சாதனைகளைச் செய்ய முடியும் தாஜ் மஹால் கல்லில் சிற்பம் செதுக்குவதைவிட சாதாரண கல்லில் சிறந்த சிற்பம் செதுக்க முடியும் என்பதை இப்பாடசாலை எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

1000 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் சிறிய பாடசாலைகள் முன்னேற வாய்ப்பு உண்டு. பிரபல பாடசாலைகளில் நெருக்கடிகளைக் குறைப்பதற்கும் சிறிய பாடசாலைகள் முன்னேறுவதற்கும் வசதியாக சிறிய பாடசாலைகளில் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்கும் பெற்றோர் முன்வர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் பூ.குகதாசனும் உரை நிகழ்த்தினார். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன (10)

## கலந்துரையாடல்

யாழ் புற்றளை மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கான கலந்துரையாடலும் 2012ஆம் ஆண்டு மாணவர் அனுமதியும் ஆசிரியர் பதவி உயர்வு படிவம் பூர்த்தி செய்வது தொடர்பான செயலமர்வும் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் அடுத்த வருடத்திற்கான வேலைத் திட்டங்கள் மற்றும் நேர சூசி, இணைப் பாடவிதான செயற்பாடுகள் ஆகிய குறித்து ஆராயப்படவுள்ளதால் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அனந்தேஸ்வரன் அறிவித்துள்ளார். (109)

## பசுவதையைத் தடுக்க முன்வரவேண்டும்

பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம் 'பசுவதையைத் தடுக்குமாறு கோரி மனு ஒன்றை பல தரப்பினரிடம் கையளித்துள்ளது.

இம்மனுவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர், மாநகர சபை உறுப்பினர்கள் யாழ். மாநகர சபை சைவ விவகாரக்குழு இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் நல்லை ஆதீன முதல்வர் ஆகியோரிடம் கையளித்துள்ளதாக இணையத்தின் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் அறிவித்துள்ளார்.

# கண்நோய்க்கான சத்திர சிகிச்சை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சை யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்று வருகின்றது.

இவ்வைத்தியசாலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த கண் கிசிச்சை நிபுணர்களால் இலவச கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் விழி வெண்படலம், பூப்படர்வுடைய நோயாளர்களுக்கே இச்சத்திர சிகிச்சை நடைபெற்று வருகின்றது.

இவ்வைத்தியசாலையூடாக வெள்ளிக்கிழமை தோறும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட குறித்த நோயாளர்களில் ஐந்து பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதாக சுகாதாரத் திணைக் களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

# குடிநீர் பிரச்சினை தொடர்பாக செல்வாபுர மக்கள் மகஜர் கையளிப்பு

(கரணவாய்)

கரணவாய் செல்வாபுரம் பகுதியில் நிலவும் குடிநீர் பிரச்சினை குறித்து கரவெட்டி பிரதேச சபை எடுத்துக் கொண்ட தீர்மாணம் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இது குறித்து நாம் விசனம் அடைந்துள்ளோம் எனக் குறிப்பிட்டு 125 கையெழுத்திடப்பட்ட மகஜர் ஒன்றை வடமாகாண ஆளுநரிடம் இப்பகுதி மக்கள் கையளித்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச சபையினால் வழங்கப்பட்டுவரும் குடிநீர் மார்கழி மாதம் 31ஆம் திகதியிலிருந்து தரமுடியாது என சபை தீர்மாணித்துள்ளது.

ஆனால், தற்போது பெய்துவரும் மழையினால் குடிதண்ணீரைப் பெற்றுவரும் கிணறு வெள்ள நீரால் நிரம்பிக் காணப்படுவதால் நல்ல தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இதைவிட அமைச்சர்களினால் ஆரம்பிக்கப்பட்ட குழாய் மூலமான தண்ணீர் பெறும் திட்டமும் இடைநடுவில் விடப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் வாழும் 76 குடும்பங்கள் குடிதண்ணீரைப் பெற நாளாந்தம் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

இப்பிரச்சினை குறித்து தீர்வு எட்டப்படவேண்டும் என செல்வாபுர மக்கள் எதிர்பார்ப்பதாகவும் இதற்கு தாங்கள் ஆவண செய்யுமாறு பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதி பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் கையளித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (18)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(27.12.2011–செவ்வாய்க்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
மார்கழி - 11 ஆம் நாள்.
இராகுகாலம் 3.27-4.57, சுபநேரம் 10.57-12.27 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு.ப . 8.16 வரை
திதி: திருதியை மு.இ. 9.42 வரை கரிநாள்

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்**– காசுக் கஷ்டம், அதிகாரப் போட்டி, குடும்பத்தில் குதூகலம், இனசன அழைப்பு, தேக சுகம்.

**ரிஷபம:**–குடும்பத்தில் கவலை, பணம் வரும், திடீர்ப் பயணம், அநியாய தீர்ப்பு, தேகம் பலவீனம்.

**மிதுனம் :**–காசுக் கஷ்டம், அயலார் தொல்லை, நண்பர் வருகை, காரிய சித்தி, தொழில் ஆதாயம்.

**கடகம்:**– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், அதிகாரப் போட்டி, இனசன உதவி, தேக சுகம்.

**சிம்மம்:**– காசுக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, நண்பர் உதவி, காரியத் தடை, கடன் தொல்லை.

**கன்னி :**– குடும்பத்தில் குதூகலம், பனம் வரும், அயல் வீடு தொல்லை, காரிய சித்தி, தேகம் சுகம்.

**துலாம் :**–காசுக் கஷ்டம், நண்பர் உதவி, திடீர்ப் பயணம், நல்ல அதிர்ஷ்டம், தேகம் சுகம்.

**விருச்சிகம்:**–குடும்பத்தில் கவலை, பணம் வரும், அயலார் கரைச்சல், நண்பர் வருகை, தேகம் பலவீனம்.

**தனுசு:**– காசுக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, திடீர் விபத்து, காரியத் தடை, தேகம், சுகம்.

**மகரம:**– குடும்பத்தில் ஆனந்தம், பணம் வரும், நல்ல அதிர்ஷ்டம், தனலாபம், அதிகாரப் போட்டி.

**கும்பம் :**– காசுக் கஷ்டம், துர்அதிர்ஷ்டம், ஞாபக மறதி, காரிய சித்தி, அயல் வீடு தொல்லை.

**மீனம் :**– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், காரியத் தடை, தொழில் அபிவிருத்தி, தன லாபம்.

# நத்தார் வெடி விபத்துக்களினால் 12 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நத்தார் பண்டிகைத் தினமான நேற்று முன்தினம் மாத்திரம்56 வாகன விபத்துக்களும் 12 சீன வெடி விபத்துச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாகன விபத்துக்களில் காயமடைந்த 56 பேரும் வெடி விபத்துக்களால் பாதிக்கப்பட்ட 12 பேரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாகவும் யாழ். போதனா வைத்தியசாலையின் விபத்துக்கள் பிரிவு குறிப்பேட்டு புள்ளி விபரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

யாழ். நகரப் பகுதியில் 42 வாகன விபத்துக்களும், யாழ். பருத்துத்துறையில் 3 வாகன விபத்துக்களும்மானிப்பாயில் ஒரு வாகன விபத்தும் நாவற்குழியில் 3 வாகன விபத்துக்களும் தீவகத்தில் 5 வாகன விபத்துக்களும் சாவகச்சேரியில் 2 வாகன விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

# வல்லிபுர சுனாமித் திட்ட மக்களின் நெருக்கடிகளை தீர்க்க நடவடிக்கை

## பருத்தித்துறை பிரதேச செயலர்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வல்லிபுரவெளி சுனாமித் திட்டப் பகுதியில் 2010 ஆண்டளவில் குடியமர்த்தப்பட்ட 61 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் 2010 ஆண்டளவில் குடியமர்த்தப்பட்ட இக் குடும்பங்களுக்கு மின்சார வசதி பெற்றுக் கொடுக்கப்படாத போதிலும், தற்போது ஒவ்வொரு வீட்டிற்கும் வடக்கின் வசந்தத்தின் கீழ் இலவச மின் இணைப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மழைகாலங்களில் இக் குடியிருப்பில் தேங்கி நிற்கும் வெள்ளநீரை அருகில் உள்ள கடலில் விடுவதற்கான முன்னேற்பாடுகளை செய்வதற்கு பரதேச சபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார் (116)



**ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தனின் ஏற்பாட்டில் சபைக்குட்பட்ட வீதிகளுக்கு 100 மின் விளக்குகள் பொருத்தும் திட்டத்தின் கீழ் எழுவைதீவு பகுதி வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்படுவதைக் காணலாம். (85)**

# க.பொ.த.(உ/த) முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர (உ/த) பரீட்சையின் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் முன்னணிப் பெறுபெறுகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் விபரம்:

### வேம்படி மகளிர் கல்லூரி

உயிரியல் பிரிவு (பழைய பாடத் திட்டம்)

சாயிபானு ராஜேந்திரம் 3 ஏ, தாட்சாயினி கணேஸ்வரன் 3 ஏ, ஜோதிஜி சிவகுருநாதன் 3 ஏ, ருக்ஷிகா சந்திரபோஸ் 2 ஏ,பி, ஜனித்திரி ஏரம்பமூர்த்தி 2ஏ,பி, லலிதாம்பிகை வைகுந்தவாஸ் 2ஏ, பி, ரம்யா அகிலலோகநாயகம் 2ஏ, பி, பிரசீனா யோகரட்ணம் ஏ, 2பி, நிவேதிகா உதயகுமார் ஏ, 2 பி, சரணிகா சிவதாஸ் ஏ, 2 பி, கிரிஜா செல்வராஜ் ஏ, 2 பி, கதுஷா இக்னேசியஸ் ஏ, பி,சி.

கணிதப் பிரிவு

சுகன்யா சிவசுப்பிரமணியம் ஏ,பி,சி.

கலைப்பிரிவு

விதுர்ஷா குபேந்திரராஜா 2ஏ, பி, வினோஜா இராசநாயகம் ஏ, 2 பி, பைரவி ஏகாம்பரபதி 2ஏ, சி, கீதாஞ்சலி கந்தையா 2ஏ, சி, நிருபா சந்திரசேகரம் 2ஏ, சி, வைணவி சிவராஜா 2ஏ, சி, தீபிகா சிவசுப்பிரமணியம் 2ஏ, சி, மேரி எட்றிசியா எட்மண்ட் ஜோர்ஸ் ஏ,2சி, மகிவதனி குசேலராஜா ஏ,2சி, கீர்த்திகா சிவபாத சுந்தரம் ஏ,பி.சி,

வர்த்தகம்

யாழினி விஜயகுமார் ஏ,2சி.

உயிரியல் - 2011 (புதிய பாடத் திட்டம்)

தமிழ் மொழி மூலம்

வாகினி நித்தியானந்தன் 3ஏ, தர்மிகா சூரியகுமாரன் 3ஏ, பிரியவதனி ஜெயபாலன் 3ஏ, சிறிசனா கெங்காதரன் 3ஏ, ஆரணி பாலசுந்தரம் 3ஏ.

ஆங்கில மொழி மூலம்

யூடின் டிலோசனா மரிய குணரட்ணம் 3ஏ, அர்ச்சனா ஆனந்தராசா 2ஏ,பி.

தமிழ்மொழி மூலம்

ஜனிதா கணேசலிங்கம் 2ஏ,சி, சன்சிகா நவரட்ணம் 2ஏ,பி, ஏஞ்சல் ருக்சனா ராஜதுரை 2ஏ,பி, சிறிதேவி வேலும்மயிலன் 2ஏ,பி, ருத்திராஞ்சலி விஜயரட்ணம் ஏ,2பி, தர்சிகா இந்திரராசு ஏ, 2பி, அபிராமி அமிர்தலிங்கம் ஏ, 2பி.

ஆங்கில மொழி மூலம்

தனுசியா குலரத்தினசேகரம் ஏ,பி.சி.

கணிதப் பிரிவு தமிழ் மொழி மூலம்

கோபிகா குகதாசன் 2ஏ,பி, வேணுஜா சோமசுந்தரஐயர் 2ஏ,சி, மோசிதா பாஸ்கரமகாராசா 2ஏ,சி, சஜிதா கிருஸ்ணபிள்ளை 2ஏ,சி, சிவாஜினி பாஸ்கரன் ஏ,2பி.

ஆங்கில மொழி மூலம்

சுபகா ஆனந்தமயில் 2ஏ,பி, ஆங்கில மொழி மூலம் உயிரியல் பிரிவில் 100 சதவீதம் சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வர்த்தகப் பிரிவு

நிருபிகா குமாரவேல் 3ஏ, துவாரகா ரவீந்திரன் 2ஏ,பி, நிவேக்கா சற்குணலிங்கம் ஏ,பி.சி, லக்ஸியா ரமணன் ஏ,பி.சி, சுபதா கமலநாதன் ஏ,2சி, கிருணாஜினி வசந்தன் ஏ,2பி, பானுஸ்ரீ சிறிஸ்கந்தராசா ஏ,சி,எஸ், குணசங்கரி சண்முகலிங்கம் ஏ,சி.எஸ், பவித்தா கணகராஜா ஏ,2சி.

கலைப்பிரிவு

அம்பிகா ஸ்ரீகாந்தன் ஏ,2பி, அம்பிகை பஞ்சலிங்கம் ஏ,பி.சி, ஜனனி கனகேசன் ஏ,பி.சி, காயத்திரி தில்லைநாதன் ஏ,பி.சி, வைஷ்ணவி பாஸ்கரன் ஏ,2சி.

### யாழ். இந்துக் கல்லூரி

கணிதப் பிரிவு (தமிழ் மொழி)

புவனேந்திரன் நிருஷன் 3 ஏ, நமசிவாயம் பிரணவரூபன் 3ஏ, சண்முககுலகுமாரன் சஜீவன் 3ஏ,

விஞ்ஞானம் (தமிழ் மொழி)

செல்வராசா சிந்துஜன் 3ஏ, ஜோசப் அருள் சில்வேஸ்வரன் 3ஏ, சண்முகவடிவேல் துஷ"பன் 3ஏ,

விஞ்ஞானம் (ஆங்கிலமொழி)

சிவகுமாரன் கோபிநாத் 3ஏ, ஸ்ரீஸ்கந்தராசா வரோதயன் 3 ஏ,

கணிதம் ஆங்கில மொழி இளங்குமாரன் கௌசிகன் 3ஏ.

யாழ். இந்துக் கல்லூரி முதற் தடவையாக ஆங்கில மொழி மூலம் தோற்றியது குறிப்பிடத்தக்கது. ஆங்கில மொழி மூலம் 3 பேர் 3ஏ எடுத்துள்ளனர்.

### யாழ். இந்து மகளிர் கல்லூரி

உயிரியல் பிரிவு

தவசேகரசிங்கம் கவிதா 3ஏ, தங்கராசா சுதாசினி 2ஏ,பி, மனோகரன் சிந்துஜா 2ஏ,பி, சித்தரங்கன் கேனகா ஏ,பி.சி.

கணிதப் பிரிவு

திருநாவுக்கரசு நிலாசினி 3ஏ, செல்வராசா செல்வலக்ஷிமி 2ஏ,பி, வி. சங்கீதா 2பி,சி.

கலைப்பிரிவு

பாலசிங்கம் பவித்ரா 3ஏ, பரலோகராஜா சோபியா 3ஏ, ஸ்ரீதரன் சம்சிகா 3ஏ, கணேசலிங்கம் தாரகா 3ஏ, ராஜகோபால் கோபிகா 2ஏ,பி, கந்தையா கோபிதா 2ஏ,பி, உருத்திரலிங்கம் உஷாலினி 2ஏ,பி, கனகரட்ணம் யஸ்மியா 2ஏ,பி, தனபாலசிங்கம் தாரணி 2ஏ,பி, சுப்பிரமணியம் ரிஷிகா 2ஏ,பி. அமலதாஸ் ஆஷா 2ஏ,சி, தங்கவடிவேல் கேமா 2ஏ,சி. ஞானசேகரம் கஜனி 2ஏ,சி, சிவஞானசுந்தரம் சுஜானா 2ஏ,சி, கனகராசா பாமிலா 2ஏ,சி, சிவநாதன் லிசாந்தினி 2ஏ,சி, சாந்தகுலசிங்கம் பிரசிகானி 2ஏ,சி. சரவணபவன் சஜித்திரா 2ஏ,எஸ்., சீவரட்ணம் பானுஜா ஏ,2பி, ஸ்ரீஸ்வரன் கிருஷாலினி ஏ,2பி, செல்வராஜா சங்கீதா ஏ,2 பி, நவீந்திரன் கர்ஷனா ஏ,2பி, கணேஸ் கர்ஷினி ஏ,2பி. பாலகிருஷ்ணன் பிருந்தா ஏ,பி.சி, சந்திரசேகரம் கஸ்தூரி ஏ,பி.சி, கிருஷ்ணராஜ்டலக்ஷனா ஏ,பி.சி, சிவசுப்பிரமணியம் தனுஜா ஏ,பி.சி, நந்தபாலா கௌதமி ஏ,பிசி, சாந்தலிங்கம் பாணுலேகா ஏ,பி.சி, நித்தியானந்தன் லோஜினி ஏ,பி.சி. பசுபதி தர்சிகா எ.பி.சி., நட ராஜா பிறைராசி 2ஏ,பி, தேவபாலன் குயிலினி 2ஏ,பி, நடராசா அ னுலஷ்மி 2ஏ, பி, நவரட்ணம் பௌசி 2ஏ,பி, யோகேஸ்வரன் தனீபா 2ஏ,பி.

வர்த்தகம்

ஸ்ரீதரன் கீர்த்திகா 2ஏ,பி, ரவீந்திரன் உதயான 2ஏ,பி, புஸ்பாகரன் சர்மிளா ஏ,பி.சி, நித்தியானந்தம் கஜந்தி ஏ,பி.சி, ஜெயசூர்யா பானுஜா ஏ,சி.பி, ஸ்ரீஸ்கந்தராஜா கீர்த்திகா ஏ,2சி, கிருஷ்ணமூர்த்தி சௌமியா 2பி,சி, யோகராஜா கிருபாஜினி 2பி,சி.

### யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

உயிரியல் பிரிவு

த. நவரீரஜா 2சி,எஸ். வர்த்தகம்

அ. சிவாஜினி 3ஏ (மாவட்ட நிலை 3), தெ. கிரிதரன் ஏ,பி.சி, உ. உஷாந்தினி 3 பி, இ. கார்த்திகா 2பி,எஸ், வி. சுஜிதா பி.சி.எஸ், சி. மதன்ரூபி பி.சி.எஸ், கு. தனுசன் பி,2எஸ், மு. தனஞ்செயன் பி.,2 எஸ்.

கலைப்பிரிவு

தி. லக்சிகா 2ஏ, எஸ், உ. வைஸ்ணவி ஏ, 2பி, வீ. வினுசியா ஏ,பி.சி, ச. சுபாஜினி ஏ,பி.சி, சி. யமிலா 3பி, மா.தர்சினி 2பி, சி, சி.ரேவதி 2 பி, சி, இ. ஆனந்தசீலன் பி, 2சி, சி. சுரேகா பி.2சி, கு. விஜயகுமார் 2பி, எஸ், த. சன்ஜா பி. 2 சி, கு. மயூரா பி, 2 சி, க. சுகிர்தனா 2 பி, சி.

(பா, எஸ்)

# நுரைச்சோலை மின் நிலையத்தால் அரசாங்கத்திற்குப் பெரும் இழப்பு

(கொழும்பு)

இலங்கையில் சீனாவின் உதவியோடு கட்டப்பட்ட நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் போதியளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாததால், அரசாங்கத்திற்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

300 மெகாவாட்ஸ் மின்சார உற்பத்தித் திறன் கொண்ட நுரைசசோலை அனல் மின்நிலையம் முழுமையாக இயங்கினால், நாளொன்றுக்கு ஆறு மில்லியன் அலகுகளுக்கும் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். ஆனால், இவ்வருடத்தில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நுரைச்சோலை மின்நிலையம் பாதியளவிலேயே இயங்கியுள்ளதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அரசாங்கத்திற்கு மில்லியன் கணக்கிலான இழப்புகள் ஏற்பட்டுள்ளன. மின் நிலையம் செயற்படாமல் போகும் ஒவ்வொரு நாளிலும் 80 மில்லியன் ரூபா இழப்பை அரசாங்கம் சந்தித்து வருகிறது.

இந்த ஆண்டில் பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகளினால் நுரைச்சோலை மின் நிலையம் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் நுரைச்சோலை மின்நிலையம் திறந்து வைக்கப்பட்ட போதும், பல்வேறு காரணங்களினால் 35 நாட்கள் அனல் மின் நிலையத்தில் மின் உற்பத்தி இடம்பெறவில்லை. இதனால் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# முன்நோக்கிச் செல்லுங்கள்; 'கரு'விடம் மேர்வின் கோரிக்கை

(கொழும்பு)

பின்னோக்கிச் செல்லாமல் தொடர்ந்து முன்செல்லுமாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரியவிடம் அமைச்சர் மேர்வின் சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்

களனி பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேர்வின் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்

நீங்கள் பௌத்த பெறுமானங்களினதும் சிங்கள பாரம்பரியத்தினதும் குறியீடாக வுள்ளீர்கள். தோல்விகள், பின்னடைவுகள் ஏற்பட்டபோதும் நீங்கள் முன்செல்ல வேண்டும் என அமைச்சர் மேர்வின் கூறினார்

இந்நிகழ்வில் பங்குபற்றிய கரு ஜயசூரிய உரையாற்றுகையில், சட்டம் என்பது, இருப்பவர்களுக்கும் இல்லாத வர்களுக்கும் சமமானதாக இருக்க வேண்டும்.



தற்போது சமூகத்தில் அந்நிலை இல்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமொன்றை ஏற்படுத்தும் தேவையை மக்கள் வெகுவாக உணர்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "குந்தியின் செல்வன்" இறுவட்டு வெளியீடு



(தொல்புரம்)

தொல்புரம் கலாலயத்தின் "குந்தியின் செல்வன்" இசை நாடக கலைஞர்கள் கௌரவிப்பும், இறுவட்டு வெளியீடும் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்றது.

தீவகக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் மு.கேசவன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தி னராக பா. தனபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். கல்வியியற் கல்லூரி கோப்பாய்) கலந்துகொண்டு முதலாவது இறுவட்டினைப் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து கலைஞர்களைக் கௌரவித்து சான்றிதழ்களும், நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டது. (50)

# தம்புள்ளையில் 3 களஞ்சியங்களிலிருந்து பாவனைக்குதவாத மரக்கறிகள் மீட்பு

(கொழும்பு)

தம்புள்ளையில் மனித பாவனைக்கு உதவாத கிழங்குகள் இரண்டு களஞ்சியங்களிலும், பெரிய வெங்காயம் ஒரு களஞ்சியத்திலும் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த களஞ்சியங்களை நுகர்வோர் சேவை அதிகார சபையும், பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைத்ததாக அதிகார சபையின் மாத்தளை மாவட்ட அதிகாரி ஏ.எம்.ஜி. சமந்த தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் உள்ள களஞ்சியங்களில் ஒரு இலட்சம் கிலோவுக்கும் அதிகமான கிழங்குகள் இவ்வாறு பழுதடைந்த நிலையில் இருந்துள்ளன.

திடீரென கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதன்போது காவல்துறையினரின் உதவியும் பெறப்பட்டது.

அத்துடன், மிகவும் பாதிப்படைந்த நிலையில் பெரிய வெங்காயமும் மீட்கப்பட்டுள்ளது.


இது தொடர்பான குற்ற வாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராச மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் பாடசாலை மண்டபத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் பொ.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் பாடசாலையின் பழைய மாணவர்களை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

# ரிக்கி பொண்டிங், கோவன் அரைச் சதம் கௌரவமான நிலையில் அவுஸ்ரேலியா



(மென்பேர்ன்)

இந்திய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பொண்டிங் மற்றும் கோவன் ஆகியோரின் இணைப் பாட்டத்துடன் அவுஸ்ரேலிய அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளது.

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று மென்பேர்னில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இந்த நிலையில் இணைந்த பொண்டிங், கோவன் இணை அணியை சரிவிலிருந்து மீட்டனர். மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 113 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை அவுஸ்ரேலிய அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 277 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் பொண்டிங் 62, கோவன் 68, வோர்ணர் 37 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது ஹடின் 21, பீற்றர் சிடில் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் உமேஷ் யதேவ் மூன்று, சகீர்கான் இரண்டு, அஷ்வின் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



## அதிக கட்டுப்பாடு



(மெல்பேர்ன்)

இந்திய-அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடைபெறும் மெல்பேர்ன் மைதானத்தில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

உலகின் மிகப்பெரிய மைதானங்களில் ஒன்றான இந்த மைதானத்தில் போட்டியைக் காண 70 ஆயிரம் ரசிகர்கள் வரை வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கு தேவையில்லாமல் பிரச்சினைகளை ஏற்படுத்தும் ரசிகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்டவர்கள் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்படுவதோடு மட்டுமன்றி, கைதும் செய்யப்படுவார்கள். மேலும் உடனடி அபராதமும் விதிக்கப்படும். ரசிகர்களை கண்காணிக்க பொலிஸார் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து மைதானத்தில் ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். போட்டியை எவ்வித பிரச்சினையுமின்றி நடத்த வேண்டும் என்பதற்காகவே இந்த அளவிற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்று அவுஸ்ரேலிய பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இலங்கையின் முதல்வன் மஹேல



(டர்பன்)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 10,000 ஓட்டங்களைக் கடந்து முதலாவது இலங்கை வீரர் என்ற பெருமையை மஹேல ஜெயவர்த்தன பெற்றுள்ளார்.

ஏற்கெனவே 9999 ஓட்டங்களைப் பெற்றிருந்த மஹேல ஜெயவர்தன டர்பன் நகரில் நேற்று ஆரம்பமான தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஒரு ஓட்டத்தைப் பெற்றபோது அவர் இந்த மைல் கல்லை கடந்தார்.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 10000 ஓட்டங்களைப் பெற்ற 9 ஆவது வீரர் மஹேல ஜெயவர்தன ஆவார்.

## முதலிரு ஆட்டங்களின் கவனம் ஆஸியில் தொடரை வெல்ல உதவும்

### இந்திய அணிக்கு அக்ரம் ஆலோசனை

(லாகூர்)

அவுஸ்ரேலிய மண்ணில் முதலிரண்டு டெஸ்ட் போட்டியில், இந்திய வீரர்கள் மிகுந்த கவனமுடன் விளையாட வேண்டும். ஏனெனில், எந்த ஒரு அணியாக இருந்தாலும், அவுஸ்ரேலிய மண்ணில் விளையாடும் முதலிரண்டு டெஸ்டில் தடுமாற்றத்தை சந்திக்கும். இதனால் தோல்வி அடைய நேரிடும். இதிலிருந்து இந்திய அணி மீளும் பட்சத்தில் டெஸ்ட் தொடரை கைப்பற்ற முடியும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

நான், டெஸ்ட் போட்டியில் விளையாட பத்து முறை அவுஸ்ரேலியா சென்றேன். அப்போது எங்கள் பாகிஸ்தான் அணி, முதலிரண்டு போட்டியில் சரிவைச் சந்தித்தது. எனவே இந்திய வீரர்கள், எச்சரிக்கையுடன் விளையாடி, முதலில் தோல்வியில் இருந்து மீள வேண்டும். இதன்மூலம் மீதமுள்ள போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி, தொடரைக் கைப்பற்றலாம்.



சச்சின், ராவிட், லக்ஸ்மன் உள்ளிட்ட அனுபவ வீரர்களுடன் களமிறங்கி உள்ள இந்திய அணி, போதிய அனுபவமில்லாத அவுஸ்ரேலியாவை வீழ்த்த அதிக வாய்ப்பு உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சதம் அடிப்பது கடினம்

(மெல்பேர்ன்)

சச்சின் டெண்டுல்கர் தனது 100ஆவது சதத்தை அவுஸ்ரேலியா மண்ணில் அடிப்பது என்பது சாத்தியமற்றதே. இதனை தடுக்கும் வகையில் ஒட்டுமொத்த அணி வீரர்களின் செயற்பாடுகள் இருக்கும் என அவுஸ்ரேலிய அணியின் துணைக் கப்டன் பிராட் ஹடின் தெரிவித்துள்ளார்.

சச்சின் 100 ஆவது சதம் என்ற மைல் கல்லை எட்டுவது இந்திய ரசிகர்களுக்கு நிச்சயம் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருக்கும். என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் அது குறித்து நாங்கள் எங்களுக்குள் எந்த விவாதத்தையும் வைத்துக் கொள்ளவில்லை. இருப்பினும் சச்சினின் 100 ஆவது சதத்தினை எங்களால் தடுத்து நிறுத்த முடியும். என நம்புகிறோம் எனத் தெரிவித்தார்.

## ஹொக்கித் தொடர் பாகிஸ்தான் வசம்



(லாகூர்)

சீனாவுக்கு எதிரான ஹொக்கித் தொடரை பாகிஸ்தான் அணி முழுமையாகக் கைப்பற்றியது.

சீன, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட ஹொக்கிப் போட்டி பாகிஸ்தானில் நடைபெற்றது.

இதில் முதல் 3 ஆட்டங்களில் ஏற்கனவே வென்று பாகிஸ்தான் அணி தொடரைக் கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் நான்காவதும் கடைசியுமான போட்டி நேற்று முன்தினம் லாகூரில் நடைபெற்றது.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பாகிஸ்தான் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தொடரை 4-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

பாதுகாப்பு பிரச்சினை காரணமாக பல்வேறு அணிகள் பாகிஸ்தான் சென்று விளையாட மறுத்து வரும் நிலையில், 7 ஆண்டு இடைவெளிக்கு பின்னர் அங்கு இந்த சர்வதேச ஹொக்கிப் போட்டி நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சௌரப் சர்மா தோல்வி

(லக்னோ)

இந்திய ஓப்பன் பட்மின்ரன் தொடரில், இந்திய வீரர் சௌரப் வர்மா இரண்டாவது இடம் பிடித்தார்.

லக்னோவில், இந்திய ஓப்பன் கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பட்மின்ரன் தொடர் நடந்தது. நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சவுரப் வர்மா, இந்தோனேஷியாவின் டவ்பிக் ஹுடாயத்தை சந்தித்தார். இதில் கடைசி வரை போராடிய சௌரப் வர்மா 15-21, 18-21 என்ற நேர் செட்டில் தோல்வி அடைந்து, இரண்டாவது இடம் பிடித்தார். இந்தோனேஷியாவின் டவ்பிக் ஹடாயத், சம்பியன் பட்டம் வென்றார்.

## ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வதே இலக்கு!

(மும்பை)

லண்டன் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வதே எங்கள் இலக்கு என, இந்தியாவின் மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஜோடி தெரிவித்துள்ளது.

இது குறித்து மகேஷ் பூபதி கூறியதாவது: இனிவரும் தொடர்களில் சகவீரர் ரோகன் போபண்ணாவுடன் இணைந்து விளையாடவிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்த ஆண்டு லண்டனில் நடக்கவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வதே எங்களது இலக்கு. இதற்கு இன்னும் நிறைய நாட்கள் இருப்பதால், அதற்குமுன் நடக்கவுள்ள போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும்.

ஒரு அணியாக இணைந்து, ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டு விளையாடுவதன் மூலம் இரட்டையர் பிரிவு போட்டியில் சாதிக்க முடியும். ஏற்கனவே டேவிஸ் கிண்ணப் போட்டியில், போபண்ணாவுடன் சேர்ந்து விளையாடி இருப்பதால், எங்களின் பலம், பலவீனம் குறித்து நன்கு அறிந்திருக்கிறோம். எனவே லண்டன் ஒலிம்பிக் போட்டியை கருத்திற் கொண்டு, போதுமான பயிற்சி மேற்கொள்ள உள்ளோம் எனத் தெரிவித்தார்.

இது குறித்து ரோகன் போபண்ணா குறிப்பிடுகையில், பூபதியுடன் இணைந்து



விளையாடவிருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்களது முதல் போட்டியான சென்னை ஓப்பன் தொடர், சொந்த மண்ணில் நடப்பதால், வெற்றியுடன் தொடக்க முயற்சிப்போம். உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு வெற்றிக்குக் கைகொடுக்கும் என நம்புகிறேன். லண்டன் ஒலிம்பிக்கில் சாதிக்க திட்டமிட்டுள்ளோம். ஆனால் அதற்கு முன், மூன்று கிராண்ட் ஸ்லாம் உட்பட 12 தொடர்கள் உள்ளன. எனவே, இத்தொடர்களை லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கான சிறந்த பயிற்சியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்



(கொழும்பு)

மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க அரசு உறுதியுடன் செயற்படுகின்றது. இந்திய மீனவரின் அத்துமீறலைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மீன் பிடிக்கைத்தொழில் தொடர்பில் முன்னுரிமை பெற வேண்டிய விடயம் மீன் நுகர்வு மூலம் இந்நாட்டு மக்களின் போஷாக்குக் குறையை, நிவர்த்தி செய்வதுதான். தற்போது நாட்டிலுள்ள 21 சதவீத குழந்தைகள் போஷாக்குக் குறைவுடன் காணப்படுகின்றனர். 2013 ஆம் ஆண்டில் இந்த விகிதம் 12 வீதமாகக் குறையும் என உலக சுகாதார ஸ்தாபனம் கூறுகிறது.

எனினும் போஷாக்கின்மையை அந்த 12 சத வீதத்திலும் குறைவானதாகக வேண்டுமென்பது எமது இலக்காகும். நான் கடமையேற்ற போது தனிநபரின் மீன் நுகர்ச்சி 31 கிராமாக இருந்தது. 2013 இல் அந்நுகர்வை 60 கிராமாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நுகர்வை 35 கிராமாக ஆக்க முடிந்தது. 2013 இல் எமது மீன் உற்பத்தி 685,000 தொன் ஆக அதிகரிக்கப்பட வேண்டும் என்பது எமது இலக்காகும் அவ்வாறு அமையும் போது தேவையான மீனை நுகர வாய்ப்புக் கிடைக்கும். புரதக் குறைபாடு காரணமாகவே 72 சதவீத மக்கள் போஷாக்குக் குறைபாடுடன் காணப்படுகின்றனர். அநேகமாக நமது மக்கள் புரதம் பெற விலங்குகளில் தங்கியுள்ளனர். ஆகவே மீன் நுகர்வை அதிகரித்துப் புரதக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய முடியும்.

அடுத்து இத் தொழிலின் முதுகெலும்பாக விளங்கும் மீனவரின் குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டும். மீனவர் நலன்கருதி வரியற்ற கைத்தொழிலாக மீன்பிடித் தொழில் ஆக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவர்களுக்குத் தேவையான வசதிகளை அளிப்பதுடன் வட்டி குறைந்த இலகுகடன் வசதிகளையும் அளித்து வருகிறோம். அவர்களது கடனுக்கான வட்டியில் 4 சதவீதத்தை அரசு பெறுகின்றது. வடபகுதி மீனவருக்கு 4 சதவீத வட்டியை அரசு பொறுப்புடன் 25 சதவீத கடனையும் அரசே மீளச் செலுத்துகிறது.

மீனவர் அனைவருக்கும் காப்புறுதித்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் தை மாதம் தொடக்கம் காப்புறுதி செய்வது ஒவ்வொரு மீனவருககும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொழில் புரியும் போது தீய விளைவுகள் ஏற்படின் நிவாரணம் பெறமுடியும். 60 வயதை அவர்கள் எட்டும் போது 10 ஆயிரம் வரை பெறக் கூடிய ஓய்வூதியத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து மீன்பிடிக் கைத்தொழிலில் நவீன தொழில்நுட்ப யுக்திகளைப் பயன்படுத்தி சட்டபூர்வமற்ற மீன்பிடி முறைகளை இனங்கண்டு அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வடக்கே இழுவைப் படகுப் பாவனை கிழக்கிலே வெடிவைத்து மீன்பிடித்தல் தெற்கிலே அனுமதிக்கப்படாத மீன்பிடி முறைகள் உள்ளன. இவை கட்டுப்படுத்தப்படவுள்ளன என்றார்.

## காணாமற்போன மீனவர் சடலமாக மீட்கப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரக் கடலில் கடந்த சனிக்கிழமை காணாமற்போன மீனவர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் 25 வயதுடைய மட்டக்களப்பு புன்னைச்சேலையைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.


மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரக் கடலில், கடந்த சனிக்கிழமை மீன்பிடிப்பதற்காக மூன்று பேர் ஒரு படகில் சென்றுள்ளனர்.

இதன்போது அவர்கள் பயணித்த படகு நடுக்கடலில் கவிழ்ந்துள்ளது.

இந்த நிலையில் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டார். ஏனைய இரண்டு மீனவர்களும் கடலில் காணாமற் போயிருந்தனர்.

இவ்வாறு காணமற்போன ஒருவரின் சடலமே நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது. மற்றையவர் குறித்து இதுவரையிலும் தகவல்கள் இல்லை.

## கிறிஸ்மஸ் விபத்துக்கள் 13 சதவீதம் அதிகரிப்பு



(கொழும்பு)

கிறிஸ்மஸ் பண்டிகை ஆரம்பமான நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் பல்வேறு விபத்துக்களில் காயமடைந்த 265 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இவற்றில் 109 வீதி விபத்துக்களும் அடங்குவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு பணிப்பாளர் பிரசாத் ஆரியவங்ச தெரிவித்துள்ளார்.

கடந்த கிறிஸ்மஸ் பண்டிகையுடன் ஒப்பிடுகையில் இந்தமுறை வீதி விபத்துக்களின் எண்ணிக்கை 13 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வெவ்வேறு விபத்துக்களுக்குள்ளான 84 பேர் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவற்றில் 18 வீதி விபத்துக்கள் உள்ளடங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நீர்கொழும்பில் சிறப்புற நடைபெற்ற தென்னாசிய இளைஞர் சமாதான மாநாடு



(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் தென ஆசிய இளைஞர் சமாதான மாநாடு கடந்த 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நீர்கொழும்பு டொன் பொஸ்கோ கல்லூரியில் இடம்பெற்றது.

இம்மாநாட்டில் இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இப்படியான பிராந்திய இளைஞர் மாநாடு இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இந்தச் சமாதான மாநாட்டில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகள் தங்களது நாட்டு நிலைவரம் அங்கு இடம்பெறும் இளைஞர்களுக்கிடையிலான பரஸ்பர கலந்துரையாடல் பற்றியும் எடுத்துரைத்தனர்.

இதேவேளை இங்கு கலந்துகொண்ட இளைஞர், யுவதிகள் கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாடும் விதத்தில் நத்தார் தாத்தா வேடம் பூண்டு கலந்து கொண்டவர்களைப் பரவசப்படுத்தினர்.

கலாசார நிகழ்வுகள் ஒவ்வொரு நாட்டு இளைஞர்களால் மேடையேற்றப்பட்டமை இங்கு விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா உரையாற்றியுள்ளார்.

## அதிக ஆடைகளை அணிந்து கின்னஸ் சாதனைக்கு முயற்சி



(கொழும்பு)

கின்னஸ் சாதனை நூலில் இடம்பெறுவதற்காக இலங்கை இளைஞரான சனத் பண்டார, ஒரே நேரத்தில் அதிக ஆடைகளை அணிந்து சாதனை படைத்துள்ளார்.

அண்மையில் கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் அவர் 252 ரீ ஷேர்ட்களை அணிந்து சாதனை படைத்தார்.

தென்கொரியாவைச் சேர்ந்த சுங் காயீ. சியோன் க்வாங் டோங் ஹோ க்வான் ஹீ என்பவர் ஒரு மணித்தியாலம் 47 நிமிடங்கள், 41 விநாடிகளில் 252 ரீ ஷேர்ட்களை அணிந்து கின்னஸ் சாதனை படைத்திருந்தார்.

இந்நிலையில், 29 வயதான சனத் பண்டார ஒரு மணித்தியாலம் 7 நிமிடங்கள், 03 விநாடிகளில் 257 ரீ ஷேர்ட்களை ஒன்றின்மீது ஒன்றாக அணிந்து சாதனை படைத்துள்ளார்.

இச்சாதனை கின்னஸ் சாதனையாளர்களால் அங்கீகரிக்கப்பட்டு தனது பெயர் கின்னஸ் சாதனை நூலில் இடம்பெறும் என நம்பிக்கையுடன் காத்திருப்பதாக சனத் பண்டார தெரிவித்தார்.

இச்சாதனைக்காக 257 ரீ ஷேர்ட்டுகளை கொள்வனவு செய்வதற்கு தான் 175,000 ரூபாவைச் செலவிட்டதாக அவர் கூறினார்

இச்சாதனை நிகழ்வின் போது தனக்கு ஆதரவளித்த டாக்டர் லால் ஏக்கநாயக்க, மஹாவலி கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் டி.எம். எஸ்.திசாநாயக்க, பிரதிப் பணிப்பாளர் பராக்கிரம அபேவர்தன மற்றும் மஹாவலி அமைச்சர் ஆகியோருக்கு தான் நன்றி தெரிவிப்பதாகவும் சனத் பண்டார கூறினார்.

## பாரத லக்ஸ்மனின் குழுவினரே முதலில் துப்பாக்கிச்சூடு நடத்தினர்

### குற்றத்தடுப்பு துறை இணைப்பு அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வா மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட முல்லேரியாச் சம்பவத்தின் போது, பாரத லக்ஸ்மன் மற்றும் அவரது குழுவினரே முதலில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றத்தடுப்புத்துறையின் இணைப்பு அதிகாரி சானி அபேசேகர இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.துமிந்தசில்வா மற்றும் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர ஆகியோர் சந்தித்த இடத்தில் வைத்து வெற்றுத் துப்பாக்கி ரவைகள் இரண்டு கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டன. இதற்கமைய இந்த வெற்றுத் துப்பாக்கி ரவைக்கு உரிய துப்பாக்கியை, பாரத லக்ஸ்மனின் பாதுகாப்பு அதிகாரியே பயன்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதுகாப்பு அதிகாரி, அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் அதிகாரியான, ஜயபிரகே காமினி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் பின்னர், காயமடைந்த நிலையில் இவர் நாரஹேன்பிட்டி பொலிஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த போது, கைது செய்யப்பட்டதாக அவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

# எழுவைதீவு வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்கப்படும்

## ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தன்

(தீவகம்)

எழுவைதீவுப் பிரதேச மக்கள் வைத்தியத் தேவைகளைச் சீராகப் பெற்றுக்கொடுக்கும் வகையில் இப்பிரதேச வைத்திய சாலை இனிவரும் காலங்களில் படிப்படியாகத் தரமான வைத்திய சாலையாக அபிவிருத்தி செய்யப்படும் என ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளரும், ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளருமான ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார்.

எழுவைதீவு வைத்தியசாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச செல்லும் வைத்திய அதிகாரி சண்முகரத்தினம் அவர்களுக்கு கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊர்காவற்றுறைப் பிரதேச அமைப்பாளருமாகிய ஜெயகாந்தன், எழுவைதீவு கடற்றொடை அதிகாரி, பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை ஊழியர்கள், எழுவை தீவிலுள்ள சமாதான நீதவான் மற்றும் ஊர்ப் பெரியோர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளர் உரையாற்றுகையில்,

வைத்திய அதிகாரியின் எழுவைதீவு மக்களுக்கான வைத்திய சேவை புரிந்தமைக்காக அவரின் அர்ப்பணிப்புள்ள சேவையினைப் பராட்டுகின்றேன்.

எமது மக்களின் வைத்தியத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நிரந்தர வைத்தியசாலை அமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மக்களால் வைத்தியசாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க எமது அமைச்சரின் முயற்சியில் புலம்பெயர்ந்து இருக்கின்ற எமது உறவுகளோடு தொடர்புகொண்டதன் அடிப்படையில் எமது உறவுகளின் நிதிப் பங்களிப்போடு 2011 ஆம் ஆண்டு இப்பிரதேசத்துக்கான நிரந்தர வைத்தியசாலை அமைப்பதற்கு அமைச்சரால் அடிக்கல் நடப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டு தற்போது மக்கள் தங்களுடைய வைத்தியத் தேவையை நிவர்த்தி செய்கின்றனர்.

இந்த அடிப்படையில் இந்த வைத்தியசாலை எதிர்வரும் காலங்களில் தரமான வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யப்படும்.

எமது பிரதேசத்தின் அபிவிருத்தியை நிறைவேற்றுவதற்கு இனவாதங்களை மறந்து அனவைரும் ஒன்றுபட்டு இணக்க அரசியல் ஊடாக எமது பிரதேசத்தின் அபிவிருத்தியை நிலைநிறுத்துவதற்கு அமைச்சரின் ஒருமித்த கருத்துக்களோடு குரல்கொடுத்து செயற்படுவோம் எனத் தெரிவித்தார். (85)

# இரு குழுக்களிடையே மோதல் இளைஞர் வெட்டிக் கொலை

(கொழும்பு)

மருதானையில் இரு தரப்பினருக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதோடு மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். இந்த மோதல் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9.40 அளவில் டி.பி.ஜயா மாவத்தையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாளிகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மொஹமட் சிராஸ் என்ற இளைஞரே சம்பவத்தில் பலியாகியுள்ளார். குறித்த இளைஞன் வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மோதலில் காயமடைந்த மேலும் நால்வர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மருதானை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து அறிக்கையில் ஆராயப்படவில்லை

## கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட பீடாதிபதி

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு அறிக்கையில் சிறுவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை போதுமானதாக அமையவில்லை என சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த சிறுவர் மற்றும் யுத்த காலத்தில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் ஆகியன தொடர்பில் அறிக்கையில் ஆராயப்படவில்லை என கொத்தலாவல பாதுகாபபுப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடாதிபதி பேராசிரியர் பிரதிபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

சிறுவர்களை போரில் இணைத்துக்கொள்ளல் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கு எதிரான விடயம். விடுதலைப்புலிகள் அமைப்பில் அதிகளவான சிறுவர்கள் காணப்பட்டனர்.

அத்துடன் அவ்வமைப்பிலிருந்து கைது செய்யப்பட்ட சிறுவர்களுக்கு நடந்தவை என்னவென்பது குறித்தும் ஆராயப்பட்டிருக்கலாம்.

இந்த விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டிருந்தால் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு அறிக்கை மேலும் வரவேற்கத்தக்கதாக அமைந்திருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், சட்டத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டார்.

# மரண தண்டனை நீக்கப் பரிந்துரை; மனித உரிமை ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

மரண தண்டனையை நீக்குமாறு கோரி அரசாங்கத்திடம் பரிந்துரைகளை சமர்ப்பிக்க மனித உரிமைகள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

மரண தண்டனை விதிக்கப்படுகின்றமையானது குற்றச்செயல்களை நிரந்தரமாகக் கட்டுப்படுததுவதற்கான தீர்வுகளில் ஒன்றாக அமையாது என அதன் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

தற்போது மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு சிறைத்தண்டனை விதிப்பது சிறந்ததாக அமையும்.

அத்துடன் மரண தண்டனை சட்டத்தை நீக்குகின்றமை தொடரபில் தாம் தற்போது கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# உணவு கையாளும் நிலையங்களில் இரவில் அதிரடிச் சோதனைக்கு ஏற்பாடு

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் எதிர்வரும் நாட்களில் இரவு நேரங்களிலும் சுகாதாரப் பகுதியினரின் திடீர் அதிரடிச் சோதனைகள் நடத்தப்படவுள்ளன.

வெதுப்பகங்கள், உணவகங்கள், தேனீரகங்கள், தின்பண்டங்கள் விற்பனை செய்யும் கண்ணாடி வண்டிகள் போன்ற உணவு தயாரிக்கும் நிலையங்களே இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இரவு நேரங்களில் பல உணவு கையாளும் நிலையங்கள் சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்குவதாக சுகாதாரப் பகுதியினருக்கு பொது மக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பகல் நேரங்களில் மட்டுமே சுகாதாரப் பகுதியினரின் கண்காணிப்பு அதிகமாக இருக்கும் என்பதால் பல உணவகங்கள் அந்த வேளையில் அவதானிப்புடன் செயற்படுகின்றன.

மாலையிலும் இரவிலும் சோதனை இடம் பெறாது என்னும் நோக்கோடு பல உணவு நிலையங்கள் சுகாதாரத்துக்கு ஒவ்வாத முறையில் நடந்து கொள்வதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சோதனையில் சிக்கிக்கொள்ளும் உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (137)

# இந்தியாவுக்கான கல்விச் சுற்றுலா

(காரைநகர்)

காரைநகர் தியாகராசா மத்திய மகா வித்தியாலய மாணவி இந்தியாவுக்கு ஒருவார கால சுற்றுலா செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்று உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து க.பொ.த.சாதாரண பரீட்சையில் 9 பாடங்களில் 6 பாடங்கள் 'ஏ' தரத்தில் சித்தியடைந்து, உயர்தரத்தில் கல்வி பயின்று வரும் செல்வி அரியபுத்திரன் யமுனா இச்சுற்றுலா செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (50)

# காலநிலை சீர்கேட்டால் 35 ஆயிரம் பேர் பாதிப்பு

எதிர்வரும் நாட்களில், வடக்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் மழை வீழ்ச்சி குறைவடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. எட்டு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள காலநிலை சீர்கேடு காரணமாக 9 ஆயிரத்து 686 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 776 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களே அதிக அளவில் பாதிக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.


முல்லைத்தீவு மாவட்டத்தில் மூவாயிரத்து 975 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் சேமநலன்களுக்காக 28 முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் தோன்றியிருந்த தாழ் அமுக்கம் தற்போது மட்டக்களப்பின் கடற்பிராந்தியத்தில் இருந்து கிழக்கு நோக்கி நகர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


சுனாமிப் பேரழிவு ஏற்பட்டு 7ஆவது வருட நினைவு இலங்கையில் பல்வேறு இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்படி யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறுவதையும், மட்டக்களப்பில் மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துவதையும், அம்பாறையில் தனது உறவுகளுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் தாயின் உணர்வையும் காணலாம்.



# நாடுகள் தோறும் நத்தார்!



அவுஸ்திரியா நாட்டில் நத்தார் சமயத்தில் மூன்று மெழுகுவர்த்திகளை ஏற்றுவார்கள். முதல் மெழுகுவர்த்தியை நத்தார் தினத்தின் முதல் நாளிரவிலும், இரண்டாவது மெழுகுவர்த்தியை டிசம்பர் 25 ஆம் திகதியும் மூன்றாவது மெழுகுவர்த்தியை விழா முடியும் தினமும், புதுவருடப் பிறப்புமான ஜனவரி 1 ஆம் திகதியும் ஏற்றுவார்கள்.

பல்கேரியாவில் நத்தார் தினத்துக்கு முன் விரதம் இருப்பார்கள். கிறிஸ்மஸ் அன்று அடுப்பில் மரத்தை வைத்து எரிப்பார்கள். எல்லோரும் எரியும் மரத்தின் மீது சோளத்தை எறிவார்கள். சோளம் எரிவது சுபிட்சத்தின் அறிகுறியாகக் கருதப்படுகிறது.

டென்மார்க்கில் அறுவடை செய்த தானியத்தைத் கொத்துக் கொத்தாக வாசற்படியிலும், மாட்டுக் கொட்டகைகளிலும் பறவைகளுக்காகக் கட்டி வைப்பார்கள். நத்தார் தினத்தன்று அந்நாட்டில் உள்ள வீடுகள் அனைத்தின் முன்பும் தானியங்களைக் காணலாம்.

கிரீஸ் நாட்டில் பாதிரியார் ஒவ்வொரு வீட்டுக்கும் வந்து புனித நீர் தெளிப்பது வழக்கம். தேவாலயங்களில் புனித நீர் தெளிக்கப்படுவது வழக்கம் என்றாலும், கிறிஸ்மஸ் தினத்தன்று வீடுகளுக்கே சென்று பாதிரியார் புனித நீர் தெளிப்பது மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது.

நோர்வேயில் மாடு, கன்றுகளுக்கு கிறிஸ்மஸ் தினத்தன்று சிறப்பாக உணவு அளிக்கப்படும். ஆமாம், மாட்டுப் பொங்கல் போலவேதான்.

போலந்து நாட்டில் விரதமிருந்துவிட்டு, சாப்பாட்டு மேசையைச் சுற்றி அமர்ந்து அனைவரும் உணவருந்தும்போது, ஒரு நாற்காலியை யாரும் உட்காராமல் தனியாக வைத்திருப்பார்கள். அதில் இயேசு நாதரே வந்து அமர்ந்து உணவு அருந்துவதாக நம்புகிறார்கள்.

சுவீடனில் கிறிஸ்மஸ் அன்று இறந்து போன முன்னோர்கள் மீண்டும் வீட்டுக்கு வருவதாக நம்புகிறார்கள். அதாவது வீடு முன்னோர்களுக்கே சொந்தம் போலவும், இப்போது குடியிருப்பவர்கள் வாடகை வட்டில் தங்கியிருப்பது போலவும் பாவனைகள் செய்வது அவர்களின் மரபு.

# கோடிகளின் நாயகன்



தமிழில் "கோடீஸ்வரன்" நிகழ்ச்சியை ஆரம்பித்திருக்கிறது விஜய் டிவி. ஹிந்தியில் அதிகம் சம்பளம் வாங்கும் நடிகராக அமிதாப் பச்சன் இருந்த போது "குரோர்பதி" நிகழ்ச்சியை அவர் நடத்தினார். பின்னர் ஷாருக்கான் சூப்பர் ஸ்டார் ஆனபோது அந்நிகழ்ச்சியை அவர் நடத்தினார். தமிழிலும் விஜய் டிவியினர் முதலில் நடிகர் விஜயை அணுகியிருந்தார்கள். சம்பளமாக பெரிய தொகையை கொடுக்க ஒப்புக்கொண்டிருந்தார்கள். சின்னத்திரைக்கு விஜய் சம்மதிக்கவில்லை. சிறிய தயக்கத்திற்குப் பிறகு அந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்க நடிகர் சூர்யா இப்போது சம்மதித்திருக்கிறார். இன்றைய திகதியில் தமிழின் இளம் முன்னணி நடிகர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் சூர்யாதான் என்று சொல்லப்படுகிறது. அவருடைய படங்களுக்குக்கிடைக்கும் ஓப்பனிங், கலெக்ஷன் ஆகியவற்றால் அஜித், விஜய் ஆகியோரை விட நான்கு கோடி அதிகமாக சம்பளம் வாங்கும் நடிகராகியிருக்கிறாராம். கோடீஸ்வரர்களை உருவாக்கும் நிகழ்ச்சிக்குத் தகுதியானவர்தான்.

# கமெரா தேவையில்லை



ஸ்மார்ட் போன் மோகம் அதிகரித்து வருவதன் காரணமாக அமெரிக்காவில் கமெரா விற்பனை சரிந்து வருவதாக சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்லைன் சந்தையில் நடத்தப்பட்ட ஆய்வில், பெரியோர்களும் இளைஞர்களும் மொபைல் கமெரா பயன்படுத்திப் படம் எடுப்பதையே அதிகம் விரும்புவதாக கண்டறியப்பட்டுள்ளது. என்.பி.டி., நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளிவிபர கணக்கீட்டின்படி, கடந்த ஆண்டு 40 சதவீதம் படங்கள் கமெராக்கள் மூலம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டில் 52 சதவீதம் படங்கள் கமெராவால் எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



ஸ்மார்ட் போன் மூலம் எடுக்கப்படும் படங்களின் எண்ணிக்கை 17 சதவீதத்தில் இருந்து 27 சதவீதமாக அதிகரித்துள்ளது.

# தாயகம், தேசியம், சுயநிர்ணயம் செல்லும் வழிகளைச் செப்புக!

இனப் பிரச்சினை தொடர்பாக மூன்று முக்கியமான அறிக்கைகளை நாம் எமது கவனத்தில் கொள்ளலாம். ஐ.நா குழுவின் அறிக்கை, நோர்வேயின் அறிக்கை, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை என்பனவாகும். இவ் அறிக்கைகள் யாவும் இலங்கை அரசுக் கட்டுமானத்தில் உள்ள குறைபாடுகளையும், பிரதான அரசியல் கட்சிகளின் அரசியல் கலாசாரத்தின் போக்குகளையும் தெளிவாக அடையாளப்படுத்தியுள்ளது. இவை ஏற்கெனவே தெரிந்ததுதான் என்ற போதிலும் பிரச்சினைகளின் தாற்பரியம் சர்வதேச அளவில் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது என்பதனை நாம் காணலாம். இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தடையாக உள்ள காரணிகளான சிங்கள தேசியவாதம், தமிழ் குறும் தேசியவாதம் என்பன தோற்கடிக்கப்பட வேண்டும் என்பது வெள்ளிடை மலை.

இப் பின்னணியிலிருந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்கும், அரசிற்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை குறித்து தெளிவாக பார்க்க வேண்டியுள்ளது. ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக படிப்பதற்கு முன்பதாகவே அதனை நிராகரிக்கும் போக்கு கூட்டமைப்பு மத்தியிலே காணப்படுகிறது. இதேபோன்ற நிலைதான் சந்திரிகா அவர்கள் அரசியல் பொதியை சமர்ப்பித்த வேளை அதனை முழுமையாக படிக்காமலேயே நிராகரித்தனர். திஸ்ஸ விதாரண அவர்களின் அறிக்கையை நாடகம் என்றனர். பின்னர் இன்று அத் திட்டங்கள் பற்றி சிலாகிக்கின்றனர்.

ஆணைக்குழுவின் அறிக்கை அரசியல் தீர்வு தொடரபாகவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்தும் தெரிவித்த கருத்துகளையும் கூட்டமைப்பு நிராகரக்கிறதா? என்ற கேள்வி எழுகிறது. போர்க்கால சம்பவங்கள் குறித்து நாம் எதிர்பார்த்த விதத்தில் பரிந்துரைகள் அமையவில்லை என்பதால் அறிக்கையை முற்றாக நிராகரிப்பது விவேகமானதா? என்ற கேள்வி எழுகிறது. இலங்கை ஓர் பல்லின மக்கள் வாழும் நாடு என்பதனையும், அதிகார பரவலாக்கத்தினை உயர்ந்த மட்டத்திறகு எடுத்துச் செல்வதன் மூலம் மக்கள் தமது சுய அடையாளங்களை பாதுகாக்க வகை செய்யப்பட வேண்டும் எனக் கூறும் இவ அறிக்கையின் அரசியல் அம்சங்களையும் கூட்டமைப்பு நிராகரிக்கிறது என பொருள் கொள்ளலாமா?...

கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை வரையறுக்க வேண்டிய சிக்கலுக்குள் மாட்டியிருப்பதை அவதானிக்க முடிகிறது. நாம் அதை விடமாட்டோம், இதை விட மாட்டோம் என மக்களுக்கு சமாதானம் சொல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ஐ.நா சபை கூறும் வரவிலக் கணங்களை துணைக்கு அழைத்து தாம் ஒன்றும் அநியாயமாக எதையும் கேட்க வில்லை. சர்வதேசம் ஏற்றுக் கொண்டதையே நாமும் கேட்கிறோம் என்ற விளக்கங்களுக்குள் செல்கின்றனர். இதற்குக் காரணம் என்ன? எதிரிகள் தம்முள் இருப்பதை தற்போது உணர்கிறார்கள் அவர்கள் உள்ளே இருந்து குடைகிறார்கள். தேசியம், சுயநிர்ணயம் என்பதைக் கைவிட்டுவிட்டதாக குற்றம் சுமத்துகிறார்கள்.

அரசுடன் என்ன பேசுகிறோம்? என்பதை இப்போது கூற முடியாது என்கிறார்கள் கூட்டமைப்பினர். மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு முன்னர் கூட்டுக் கட்சிகளுக்கே தெரியாத நிலை காணப்படுமானால் அதன் அர்த்தம் என்ன? அரசாங்கம் தனது நிலைப்பாட்டை அடிக்கடி கூறுகிறது. தான் எதிலும் விடாப்பிடியாக இருப்பதாக சிங்கள தேசியவாதிகளுக்கு செய்திகளை அனுபபுகிறது. காணி அதிகாரம் இல்லை. பொலிஸ் அதிகாரம் இல்லை. வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை. இது அரசின் நிலைப்பாடு. அவ்வாறானால் கூட்டமைப்பு சொல்ல மறைக்கின்ற அல்லது மறுக்கின்ற அரசியல் என்ன?

சிவில் சமூகம் என்ற பெயரில் வெளியாகிய குற்றச்சாட்டுகள் குறித்து தெளிவான பதில்களை முன்வைக்க முடியாமல் ஏதேதோ பேசப்படுகிறது. கூட்டமைப்பின் கட்சிகளிடையே நல்லிணக்கம் இல்லை என்பது வெளிப்படுகிறது. தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை கூட்டமைப்பு கைவிட்டுள்ளதாக குற்றம் சாட்டப்படுகிறது. இவற்றிற்கு தகுந்த பதில்களை வழங்காமல் ஈ.பி.டி.பி உடன் கஜேந்திரகுமார் கோஷ்டியினரை இணைத்து கூட்டமைப்பினை பிளவுபடுத்த முயற்சிப்பதாக பிரித்தானிய கூட்டமைப்பு கிளை கூறுகிறது. சிவில் சமூக அறிக்கையை தமிழரசுக் கட்சியின் செயலாளர் பெற்றுக் கொணடதாக செய்திகள் கூறுகின்றன. அவ்வாறானால் கஜேந்திரகுமார், ஈ.பி.டி.பி கூட்டில் இவர்களும் உள்ளார் களா? கஜேநதிரகுமார் குழுவினர் இணைப்பாட்சி கோருகின்றனர். அரசை கடுமையாக விமர்ச்சிக்கின்ற னர். ஈ.பி.டி.பியினர் ஐக்கிய இலங்கைக்குள் அதிகார பரவலாக்கல் அடிப்படையில் தீர்வைக் கோருகின்றனர். இவர்கள் எவ்வாறு இணைகிறர்கள்? பிரித்தானிய கூட்டமைப்பு கிளை இலக்கை நழுவ விட்டுவிட்டது.

கூட்டமைப்பினர் தேசியம், சுயநிர்ணயம் என்ற அடிப்படைக் கோட்பாடுகளைக் கைவிட்டு சட்டப்படியான நல்லாட்சி, சம உரிமை என்ற கோட்பாடுகளுக்குள் சென்றுவிட்டதாகவும், இக் கோட்பாடுகளின் மூலம் தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை உறுதி செய்ய முடியாது என்பது அவர்களின் வாதமாக உள்ளது. இதற்குப் பதிலகளைக் கூறாமல் கூட்டுச் சதி என சப்பைக்கட்டுப் போடுவது எந்த வகையான அரசியல்? தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை எவ்வாறு பெறுவது? என்பது குறித்து சிவில் சமூகத்தினர் ஏன் வரையறுக்கவில்லை? பேச்சுவார்த்தை மூலமா? அல்லது வேறு வழிகளிலா? அவ்வாறானால் அவை எவை?

இலங்கை ஒரு முதலா ளித்துவ சந் தைப்பொருளாதார கட்டமைப்பினையும், லிபரல் ஜனநாயக அரசியல் கட்டுமானத்தையும் கொண்டுள்ளது. இவ் ஆட்சிக் கட்டமைப்பில் சட்டப்படியான ஆட்சியையும், சம உரிமையையும்தான் வற்புறுத்த முடியும். சமூகங்களின் தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை லிபரல் ஜனநாயக கோட்பாடுகள் வழங்கும் நிர்வாகக் கட்டுமானங்கள் மூலம் வளர்த்தெடுக்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் முன்னைய தமிழ் தலைவர்கள் பிரச்சினைகளை அணுகினார்கள். பண்டா -செல்வா ஒபபந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம், மாவட்ட அபிவிருத்திச் சபை, இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பன நடந்தேறின. இவர்கள் தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றைக் கைவிட்டார்கள் என சிவில் சமூகம் கூற விழைகிறதா?



கூட்டமைப்பு தான் போட்ட வலைக்குள் சிக்கி வெளியே வர முடியாமல் தவிக்கிறார்கள். புலிகள் எவ்வாறு தம்மைச் சுற்றி சுவர்களை எழுப்பி வெளியுலக தரிசனத்தை இழந்து இறுதியில் அப் பொறியில் சிக்கி அழிந்தார்களோ அந்த நிலை கூட்டமைப்பிற்கு ஏற்பட்டுள்ளது. அரசுடன் பேச்சுவார்த்தை நடத்து வதற்கான அடிப்படை நோக்கங்களை தெளிவுபடுத்த கூட்டமைப்பு தடுமாறுகிறது. தம்மால் முன்வைக்கப்பட்ட தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாடுகளை கைவிட்டுள்ளதாக குற்றஞ்சாட்டும் போது தடுமாற்றம் காணப்படுகிறது. சட்டப படியான ஆட்சி, சம உரிமை என்பன ஜனநாயக ஆட்சியின் அடிப்படைகள். மொழியால், மதத்தால் பாகுபாடு காட்டப்படும்போது ஜனநாயக விழுமியங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. எனவே சட்டப்படியான ஆட்சியையும், சம உரிமையையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. இவை எந்த விதத்திலும் விட்டுக்கொடுப்பு ஆகாது. முதலில் தேசத்தில் வாழும் மக்கள் மனிதர்களாக நடத்தப்பட வேண்டும். அதன் பின்னர் தான் விசேட அடையாளங்கள் பற்றிய பிரச்சினைகள் அமைகின்றன.

சிவில் சமூகம் என்ற பெயரால் பேச்சுவார்த்தைகளை முடக்க அடிகோலப்படுகிறது. கூட்டமைப்பு பாராளுமன்ற அரசியல் ஆசனங்கள் பறிபோய்விடும் என்று பதறி மன்னார் ஆயருக்கு பதிலளிக்க முற்படுகிறது. அரசாங்க தரப்பினர் கூட்டமைப்பு ஐ.தே கட்சியோடும் மேற்குலக நாடுகளுடனும் இணைந்து பாராளுமன்ற தெரிவிக்குழுவில் கலந்துகொள்ளாமல் தவிர்ப்பதாகவும், புலிகள் போல நடந்து கொள்வதாக குற்றம் சாட்டுகிறது. கூட்டமைப்பு தனது அரசியல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

பதில் மக்களுக்கு தேவைப்படுகிறது. தமிழ் சமூகத்தின் அரசியல் போக்கில் காத்திரமான மாற்றங்கள் தேவைப்படுகின்றன. தெளிவானவாதப் பிரதி வாதங்கள் தேவைப்படுகின்றன. கூட்டமைப்பின் தடுமாற்றம் இதனையே உணர்த்தி நிற்கிறது.

*- வி.சிவலிங்கம் கட்டுரையிலிருந்து*



# ஜெயலலிதா அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா!

"சசிகலா அண்ட் கோ"வை அ.தி.மு.க விலிருந்து நீக்கிவிட்டதாக முதல்வர் ஜெயலலிதா பெயரில் அறிவிப்பு வந்தவுடன், இந்த நடவடிக்கையின் பின்னணி குறித்து மளமளவென கட்டுரைகள் குவிந்தன மீடியாவில்.

"ஜெயலலிதாவை மிஞ்சும் வகையில் சசிகலா மற்றும் அவர் உறவினர்கள் அதிகாரமையமாக செயற்பட்டதால் ஜெ எடுத்த அதிரடி நடவடிக்கை"

"அடுத்த தேர்தலில் ஆட்சி மாற்றம் நிச்சயம் என்பதால், முடிந்த வரை அனைத்து துறைகளிலும் பணம் பார்க்க சசிகலா அண்ட் கோ மும்முரம் காட்டியதால் கோபப்பட்ட அம்மா தூக்கிவிட்டார்".

"சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக தீர்ப்பு வரும் நிலை உள்ளது. அப்படி வந்தால் ஜெயலலிதாவால் முதல்வராகத் தொடர முடியாது. வழக்கப்படி அவரது விசுவாசி ஓ.பன்னீர்செல்வத்தை முதல்வர் பதவியில் அமரவிடாமல் தடுதது, எம்.நடராஜனை முதல்வராக்க சசிகலா கும்பல் திட்டம் தீட்டியது அம்பலமானதால் இந்த அதிர்ச்சி நடவடிக்கை".

"அமைச்சரவையே சசிகலா கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டதால் ஜெயலலிதா இப்படி ஒரு முடிவு எடுத்துள்ளார்".

"உளவுத்துறையின் ரகசிய அறிக்கைகளைக் கூட சசிகலாதான் படித்து முடிவெடுக்கும் நிலை உள்ளது. அந்த அளவு ஜெயலலிதாவை யாரும் அணுக விடாமல் சசிகலா கும்பல் தடையாக நிற்கிறது."

- இப்படி இன்னும் பல காரணங்களை அடுக்கி வருகிறார்கள்.

இவை அனைத்தும் உண்மையாக இருக்கலாம். அல்லது முழுக்க பொய்யாகவும் இருக்கலாம்.

ஆனால் ஒன்று, சசிகலாவை எல்லா கூட்டங்களுக்கும், கட்சி நிகழ்ச்சிகளுக்கும், அமைச்சரவை கூட்டம் உள்ளிட்ட அரசு ரீதியான நிகழ்வுகளுக்கும் அழைத்துச் சென்றவர் ஜெயலலிதாதான். அவரை யாரும் துப்பாக்கி முனையில் வைத்து, சசிகலாவை கூட்டிச் செல்லுங்கள் என்று மிரட்டவில்லை. அவராக விரும்பியே அத்தனை அதிகாரங்களையும் சசிகலாவுக்கு கொடுத்தார். அ.தி.மு.க செயற்குழு உறுப்பினராக்கினார். தனக்கு மாற்று சசிகலாதான் என்ற தோற்றத்தை உருவாக்கினார். உடன் பிறவா சகோதரி (உ.பி.ச) என்ற புதிய சொல் தமிழ் அகராதியில் ஏற காரணமாகவும் இருந்தார்!

உளவுத் துறை அறிக்கையைக் கூட படிக்கிறார், அமைச்சரவை என்ன செய்ய வேண்டும் என்பதை "ஜெயலலிதா சார்பில் சசிகலா என்ற ஒரு சாதாரண பெண மணி டிக்டேட் செய்கிறார் என்றால், அது மிரட்டி சாதிக்கக் கூடிய விஷயமா?

2001-2006 வரையிலான அ.தி.மு.க ஆட்சியிலும் சசிகலா இதே அந்தஸ்தில்தான் இருந்தார் என்பதையும் மறந்துவிட வேண்டாம். அன்றும் சசிகலா மூலமே தனியார் கல்லூரிகள் தொடங்கி, லோக்கல் தொழிலதிபர்கள் வரை காரியம் சாதித்துக் கொண்டனர். அப்போதெல்லாம் வராத கோபம் இப்போது ஜெயலலிதாவுக்கு வந்துவிட்டதாக சொல்வது நம்பும்படி இல்லை.

இதையெல்லாம் விட முக்கியமான ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும்.

முன்னாள் வளர்ப்பு மகன் சுதாகரன், சசிகலாவின் கணவர் (முன்னாளா இன்னாளா ஒரு எழவும் புரியாத சமாச்சாரம்) நடராஜன் போன்றவர்கள் இப்போதுதான் கட்சியிலிருந்தே நீக்கப்பட்டதாக அறிவித்துள்ளார் ஜெ!

ஆனால் இதற்கு முன்பே இரு முறை, "வளர்ப்பு மகன் சுதாகரன், நடராஜன் ஆகியோருக்கும் கட்சிக்கும் எந்த தொடர்பும் இல்லை. இவர்கள் அ.தி.மு.க உறுப்பினர்கள் அல்ல. கட்சியினர் யாரும் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது" என இதே ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். கஞ்சா வழக்கில் வளர்ப்பு மகன் கம்பி எண்ண, செரீனா வழக்கில் நடராஜனை காய்ச்சி எடுத்தது, முந்தைய ஜெ அரசு என்பதை புதிதாக அரசியல் படிப்போர் வேண்டுமானால் மறந்திருக்கலாம்!

ஒரு உறுப்பினரை எத்தனை முறைதான் கட்சியிலிருந்து நீக்குவார் ஜெயலலிதா?

ஜெயலலிதாவுக்கும் சசிகலாவுக்கும் பிணக்கு வருவதும், பின்னவர் போயஸ் தோட்டத்திலிருந்து வெளியேறிச் செல்வதும் இது முதல் முறையும் அல்ல. மூன்றாவது முறை.

பிணக்கு வரவும் பிரிந்து போகவும் இதுதான் காரணம் என புலனாய்வுப் பத்திரிகைகள் ஒவ்வொரு முறையும் விதவிதமான காரணங்களைக் கற்பித்து கட்டுரை எழுத, அவற்றைப் பொய்யாக் கும் விதத்தில், குறுகிய காலத்திலேயே மீண்டும் பெவிக்கால் போட்டு ஒட்டிக் கொண்டு நிற்பது உடன் பிறவா சகோதரி களின் பாணி.


இந்த முறை, இந்தப் பிரிவு, சொத்துக்குவிப்பு வழக்குக்காகவா, ஏதாவது கிரக தோஷபரிகாரத்துக்காகவா, அல்லது பால் விலை- பஸ்கட்டண உயர்வு, தமிழகமெங்கும் கிழிந்து தொங்கும் சாலைகள், திரும்பிய பக்கமெல்லாம் பிரச்சினைகள் என அம்பலமாகிவிட்ட திறமையற்ற நிர்வாகத்தை மறைக்கவா! என்பது சீக்கிரமே தெரிந்துவிடும்.

ஜெயலலிதா அரசியலில் இது அதிரடிதான்! ஆனால் இப்படி நடப்பது இது முதல்முறையல்ல என்பதுதான் கவலைக்குரியது.

ஆனால், இதற்கு முன் நடந்த சொத்துக்குவிப்புகள், ஊழல்கள், கொள்ளைகள், இப்போது நடக்கிற முறைகேடுகள், ஆட்சி அவலங்கள் அனைத்துக்கும் சசிகலா கும்பல்தான் காரணம், ஜெயலலிதா ஒன்றுமே தெரியாத நேர்மையாளர் என்பது போன்ற தோற்றங்களை உருவாக்க சிலர் முயன்று வருவது அதைவிட கவலைக்குரியது!

- *விதுரன்*

# நஞ்சு காவும் சிவில் சமூகம்




**யா**ழ்ப்பாண சிவில் சமூகம் என கூறிக்கொண்டு வெளியிட்ட அறிக்கையை படித்தேன். பாம்புக்கு தலையில் மட்டும் நஞ்சு உள்ளது. தமிழ் அரசியல் சமூகத்தின் மனிதர்களுக்கு நினைப்பிலும் எழுத்தில் நஞ்சு வடிகிறது. இவர்களது இந்த நஞ்சு நிச்சயமாக போரில் தப்பிப் பிழைத்து இருக்கும் சாதாரண தமிழ் மக்களை கொல்லப் போகிறது என்ற பயத்தில் இந்த பத்தியை எழுதுகிறேன்.

அந்த அறிக்கையில் இரண்டு பந்திகளிலிருந்து, இவர்களும் விடுதலைப்புலிகளைப் போல் ஜனநாயகத்தில் நம்பிக்கையற்றவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஒரு ஜனநாயக சமூகத்தில் உதிரிக்கட்சி என ஒன்று இல்லை. ஒவ்வொரு மனிதனின் கருத்தும் கணக்கெடுக்கப்பட வேண்டியது. மேலும் ஒரு இனம் தனது உரிமையை கேட்கும் போது மத்திய வகுப்பினர், விவசாயிகள், முதலாளிகள், தொழிலாளிகள் என்ற வர்க்கங்கள் மட்டுமல்ல பிரதேச ரீதியாக மக்கள் தேவைகள் ஆராய்ந்து கணக்கெடுக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாண மக்களது தேவைகள் மட்டக்களப்பு, வன்னி மாவட்ட மக்களது தேவைகளில் இருந்து மாறுபட்டது. தமிழ் பேசும் மக்கள் என்னும் போது மலையக, இஸ்லாமிய ஏன் தற்பொழுது கொழும்பில் வாழும் மக்களையும் அனுசரித்து அவர்கள் தலைவர்களையும் சேர்த்துக் கொண்டே தமிழ் உரிமைகள் பற்றி பேசப்படவேண்டும்.

6,40,000 யாழ் குடாநாட்டு மக்கள் மட்டுமோ அல்லது அவர்களது தலைவர்கள் மட்டுமோ ஏனைய தமிழர்களின் தலைவிதியை பேசிய காலம் இறந்தகாலம். நாங்கள் பார்க்கும் நிகழ்காலம் தமிழ்மக்கள் அதாவது 4 சதவீதமானோர் வாழ்வது இலங்கையின் 9.5 வீத நிலப்பரப்பைக் கொண்ட வடக்கு மாகாணம்.

தற்போதைய அரசியல் நிலையை கருத்தில் கொள்ளாமல் வடக்கு கிழக்கு இணைப்பு, தமிழ் தேசியம், காணி, பொலிஸ் என கடந்த கால கனவுகளில் வாழ்ந்து வரும் வெளிநாட்டு விடுதலைப்புலி ஆதரவாளர்கள் போல கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேல் எதுவித நடவடிக்கையிலும் ஈடுபடாமல் இந்த அறிக்கை மூலம் தமிழ்கூட்டமைப்பினரை ஆட்டிப்படைக்கும் நடவடிக்கையில் ஈடுபட முனைகிறார்கள். இந்த சிவில் சமூகத்தில், யாழ் மேலாதிக்க தன்மையின் அசலான கருத்தியல் வடிவம் தெரிகிறது.

இவர்களது அறிக்கை மீண்டும் ஒரு ஆயுதப் போருக்கு வழிவகுக்கும் என்ற அச்சத்தின் காரணத்தால்தான் இதை கடுமையாக விமர்சிக்க விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் இந்தத் தமிழ்த்தேசிய கருத்தியலை சிம்மாசனம் ஏற்றியவர்கள் ஜுலை 2009 இற்குப்பின் அந்தரத்தில் தொங்க விட்டு மீண்டும் இரண்டரை வருடத்தின் பின் மீண்டுவந்து தங்கள் யாழ்ப்பாண ஆதிக்கத்தை முருங்கை மரத்தில் ஏற்ற முனைகிறார்கள்.

சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வளவு காலமும் எங்கே இருந்தார்கள்?

முள்ளிவாய்க்காலுக்கு அப்பாவிப் பொதுமக்களை கால்வாய்கட்டி கொண்டு சென்ற போது இவர்கள் எங்கு போனார்கள்?

தப்பியோடியவர்களை சுட்டும் வாள் கொண்டு துரத்திய போதும் நமது மத குருமார்கள் மவுனித்தது ஏன்?

வலயர்மடத்து தேவாலயத்தில் இருந்து பெண்குழந்தைகளை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்ற போது நீங்கள் கர்த்தரின் பேரால் என்ன அறிக்கை விட்டீர்கள்?

எந்த ஒரு சமுதாயத்திலும் சிவில் சமூகம் மதிப்புக்குரியது. இந்த மூன்று இலட்சம் மக்கள் அகதியாக அல்லல்பட்ட இரண்டரை வருடத்தில் உங்களது செயற்பாடுகள் என்ன என்பதை மக்கள் முன்னால் வைத்து விட்டு அறிக்கையை விட்டிருக்கலாம்.

விடுதலைப்புலிகள் இருக்கும் வரை பொட்டம்மானுக்கு பயந்து பயந்து சீவித்து இப்பொழுதுதான் கூட்டமைப்பினர் சுதந்திரகாற்றை சுவாசிக்கிறார்கள்.

அவர்களை சுயமாக நடவடிக்கை எடுக்க விடுங்கள். இப்படிச் சொல்வதனால் நான் கூட்டமைப்பின் ஆதரவாளன் என்று கருதவேண்டாம்.

ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கபட்ட அவர்களை நாடுகடந்த ஈழம் பேசுவோரும் மற்றும் நெடியவன் தலைமையிலான குழுவினரும் கைப்பற்றி தங்கள் அரசியலை நடத்த விரும்புகிறார்கள். அந்த கோஷ்டியில் சிவில் சமூகம் சேர்ந்து விட்டது. சிங்கள சமூகத்திலும் உங்களைப் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் எதிர்ப்போராட்டம் நடத்தினால் இதனால் ஏற்படும் விளைவுகள் மீண்டும் ஒரு வன்முறைப் போராட்டத்தையே உருவாக்கும்.

மீண்டும் ஒரு புலி இயக்கத்தை உருவாக்கி குளிர்காய முற்பட வேண்டாம். அதனால் அதற்கு பலியாவது நீங்களாகக் கூட இருக்கலாம். 77 இல் தலைவர் அமிர்தலிங்கம் தனது செயல்களால் 89 இல் தன்னுயிருக்கு ஆபத்து வரும் என்பதை சிந்தித்திருக்க மாட்டார்.

நீங்கள் சொல்லும் இந்த இந்தப் பகிஷ்கரிப்பு விடயம் புதிகாக உங்கள் மூளையில் மலரும் புதிய சாணக் கியம் என பெருமிதம் கொள்ள வேண்டாம். நான் பிறக்க முன் பிருந்தே இதைத்தான் யாழ்ப்பாணத் தமிழன் செய்து கொண்டிருக்கிறான்.

கொஞ்சம் சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டிப் பார்ப்போம். தமிழர்களுக்கு பகிஷ்கரிப்பு புதியதில்லை. 1931இல் டொனமூர் கமிசனால் உருவான சபையை பகிஷ்கரித்த சேர். பொன் இரமநாதன் குழுவினர் வெள்ளாளர் அல்லாதோருக்கு வாக்குரிமை கிடைக்கக் கூடாது என்றனர். இளைஞர் காங்கிரஸ், இலங்கைக்கு முழு விடுதலை கிடைக்கவில்லை என பகிஷ்கரித்ததால் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களுக்கு தேர்தல் நடக்கவில்லை. பின்னர் யாழ்ப்பாணமக்கள் தாங்கள் தவறிழைத்து விட்டோம் எனச் சொல்லி தேசாதிபதிக்கும் இங்கிலாந்துக்கும் மகஜர் எழுதினார்கள். ஆனாலும் 1934 ஆண்டில் மீண்டும் நடந்த தேர்தலின் போதுதான் மேற்கண்ட தொகுதிகளுக்கும் தேர்தல் நடந்தது. இப்படியான முட்டாள்தனமான பகிஷ்கரிப்பு இன்றுவரையும் தொடர்ந்து வருகிறது.

இலங்கையில் தமிழ் அரசியல் என் பது காலம் காலமாக நல்ல கண வனுக்காக காத்திருக்கும் பெண கடைசியில் கன்னி கழியாமல் கல்லறைக்கு போவது போலாகி வட்டது. இதுதான் கடந்த எண்பது வருட சரித்திரம்.

குப்பை மேட்டு சேவல் அந்தக் குப்பையைச் சுற்றி கொக்கரிப்பது போல்தான் இந்த பகிஷ்கரிப்பு கோஷமும். யாழ்ப்பாணத்தை விட்டு எப்பொழுது இந்த இலங்கைத் தமிழ் அரசியல் வெளிவருகிறதோ அன்றுதான் தமிழர்களுக்கு நல்லகாலம் தொடங்கும்.

- *நடேசன் கட்டுரையிலிருந்து*

# தமிழகத்தில் பிரதமர் மன்மோகன் சிங்



(சென்னை)

முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கை தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றுச் சந்தித்து பேசினார்.


கருணாநிதியுடன் அவரது மகளும் எம்.பி.யுமான கனிமொழியும் சென்று பிரதமரைச் சந்தித்தார். நேற்றுமுன்தினம் மாலையில் வந்த பிரதமரை தமிழக முதல்வர் ஜெயலலிதா சந்தித்துப் பேசினார். இவர் தமிழகப் பிரச்சினைகள் குறித்து விவாதித்தார். இதேவேளை முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கண்டனம் தெரிவித்து பிரதமருக்கு கறுப்புக்கொடி காட்டப்படும் என தே.மு.தி.க. அறிவித்திருந்தது. இதனையொட்டி தியாகநகரில் இருந்து கறுப்புக் கொடியுடன் தனது கட்சி தொண்டர்களுடன் புறப்பட்டபோது விஜயகாந்த் பொலிஸா ால் கைது செய்யப்பட்டார். இவருடன் 4 எம்.எல்.ஏ.க்கள் உட்பட 600 தே.மு.தி.க.வினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சென்னை பல்கலைக்கழகத்தில் நடக்கும் கணித மேதை ராமானுஜர் 125ஆவது பிறந்ததின விழாவில் பங்கேற்றார். பின்னர் கரைக்குடியில் அழகப்பா பல்கலையில் ராமானுஜர் உயர் கணித மையத்தை பிரதமர் மன்மோகன் சிங் திறந்து வைத்தார்.

## படகு விபத்தில் 22 பேர் பலி

தமிழகத்தில் சென்னைக்கு அருகிலுள்ள பழவேற்காடு ஏரியில் படகொன்று கவிழ்ந்ததால் 22 பேர் பலியாகியுள்ளனர். சென்னையிலிருந்து 60 கிலோமீற்றர் தூரத்திலுள்ள திருவள்ளூர் மாவட்டத்தின் பழவேற்காடு ஏரியில் நேற்று முன்தினம் மாலை சுமார் 25 பேர் உல்லாசப் படகுச் சவாரியில் ஈடுபட்டிருந்த போது இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பாரம் தாங்க முடியாமல் படகு, ஏரியில் கவிழ்ந்த நிலையில் 22 பேர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிலர் காப்பாற்றப்பட்டனர்.



அதுவா சார், முல்லைப் பெரியாறு மட்டுமில்லை. வேறு எந்தப் பிரச்சனையையும் இந்தப் பிரதமர் தீர்த்து வைக்கப் போறதில்லைன்னு எனக்கு உறுதியாக தெரியும்...! அதனால நிரந்தரமாகவே ஒரு கறுப்புக் கொடியை ஏத்தி வைச்சுட்டேன்..!

## கடும் குளிர்; 128 பேர் பலி

(டில்லி)

இந்தியாவின் வட மாநிலங்களில் கடும் குளிர் மற்றும் பனிக் காற்றுக்கு நேற்று முன்தினம் வரை, 128 பேர் பலியாகியுள்ளனர்.

டில்லியில் கடந்த ஐந்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு நேற்றுமுன்தினம் அதிகாலை வெப்ப நிலை 2.9 டிகிரி செல்சியசாக இருந்தது. அதே நேரத்தில், அமிரதசரஸ் நகரில் 1.6 டிகிரி செல்சியசாக இருந்தது.

அடுத்த சில நாட்களுக்கும் இந்த நிலை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையத்தினர் கூறியுள்ளனர். கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் டில்லியில் வெப்ப நிலை 5.2 டிகிரி செல்சியசாக இருந்தது. வட மாநிலங்களில் நிலவும் கடும் குளிர் மற்றும் பனிக் காற்றுக்கு இதுவரை 128 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 88 பேர் உத்திரப் பிரதேச மாநிலத்தினர். ஜம்மு-காஷ்மீர்



மாநிலம் ஸ்ரீநகரில் நேற்று வெப்ப நிலை 3.3 டிகிரி செல்சியசாக இருந்தது.

## ஜப்பானுடன் அணுசக்தி ஒப்பந்தம்

(டில்லி)

அணுசக்தி விவகாரங்களில், கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து, பிரதமர் மன்மோகன் சிங்குடன், ஜப்பான் பிரதமர், நேரில் பேச்சு நடத்த உள்ளார். வரும் 27ஆம் திகதி டில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் இரு நாட்டு பிரதமர்களும் முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி ஜப்பான் பிரதமர் யோஷிகோ நோடா இந்தியா வருகிறர்ர். ஜப்பான் மற்றும் இந்தியாவின் ஆறாவது மாநாட்டில் அவர் பங்கேற்றுப் பேசவுள்ளார்.

இந்தியா முழுவதும், 20 புதிய அணு உலைகளை நிறுவ மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாகப் பல் வேறு நாடுகளுடன் மத்திய அரசு ஒப்பந்தம் செய்து வருகிறது. ரஷ்யா, அமெரிக்கா நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்ய நீண்ட காலமாக முயற்சித்தும், அந்த [illegible] அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆனால் இந்தியாவுடன் அணுசக்தி குறித்த கூட்டு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அமெரிக்கா பிரான்ஸ் நாடுகள் ஜப்பானுக்கு அழுத்தம் கொடுக்கின்றன. இந்தியாவில் தற்போது ஜப்பான் நிதி உதவியுடன், பல திட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.

## மாவோயிஸ்டுகள் தாக்குதல்

(விசாகப்பட்டினம்)

ஆந்திராவில் வனத்துறை கட்டடத்தை மாவோயிஸ்டுகள் குண்டு வைத்து தகர்த்தனர். ஆந்திராவின் விசாகப்பட்டினம் மாவட்டம், செர்பள்ளி கிராமத்தில் வனத்துறைக்கு சொந்தமான கட்டடம் உள்ளது. இப்பகுதியில் பாக்சைட் சுரங்கம் உள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட வல்லுனர் குழு சமீபத்தில் இப்பகுதியை விமானத்தின் மூலம் பார்வையிட்டது. இவர்கள் சாலை வழியாக வருவதைத் தடுக்க மாவோயிஸ்டுகள் மரங்களை வெட்டி சாலையில் போட்டுள்ளனர். இதற்கிடையே இங்குள்ள வனத்துறை அலுவலகத்தை நேற்றுமுன்தினம் குண்டு வைத்துத் தகர்த்தனர். இங்கிருந்த தொலைக் காட்சிப்பெட்டியும், கணினியும் களவாடப்பட்டுள்ளன. அண்மையில் மாவோயிஸ்ட் தலைவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சமயக் கடமைகளை நிறைவேற்ற கிறிஸ்தவர்களுக்கும் அரசு உதவி

(சென்னை)



கிறிஸ்தவர்கள் ஜெருசலம் சென்றுவர, ஆண்டுக்கு 500 பேருக்கு தலா 20 ஆயிரம் ரூபாய் வழங்க, ஒரு கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

இஸ்லாமியர்கள் ஹஜ் பயணம் செல்வதற்கு அரசு உதவி செய்வதை போல, கிறிஸ்தவர்களின் புனித ஸ்தலமான ஜெருசலம் சென்றுவர, அரசு உதவி செய்ய வேண்டுமென கோரிக்கைகள் வந்தன. இதை ஏற்று, அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய கிறிஸ்தவர்கள் முதற்கட்டமாக 500 பேர் ஜெருசலம் சென்றுவர ஏற்பாடு செய்யப்படுமென, சமீபத்தில் நடந்த கிறிஸ்மஸ் விழாவில் முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

இதன்படி, இத்திட்டம் பற்றி விளம்பரம் செய்து, விண்ணப்பங்களைப் பெற்று பயணிகளைத் தேர்வு செய்யும் பணி சிறுபான்மை நல ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து ஜெருசலம் சென்றுவர, பயணக் கட்டணம் மட்டும் 45 ஆயிரம் முதல் 47 ஆயிரம் ரூபாய் வரை செலவாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## பொங்கலுக்குத் தயாராகும் சென்னை



(சென்னை)

சென்னை வாசிகள் எரிவாயு அடுப்பில் ஆண்டு முழுவதும் சமைத்தாலும் பொங்கல் பண்டிகையை கொண்டாட மண் அடுப்பைப் பயன்படுத்தி, மண் பானையில் பொங்கல் வைப்பதை கடைபிடிக்கின்றனர்.

இந்த வழக்கத்தால் ஆண்டுதோறும் மண் அடுப்புகள் சென்னைக்குக் கொண்டு வரப்படுகின்றன. இந்த ஆண்டு மானாமதுரை மேலப்பசிலை கிராமத்திலிருந்து 14 தொன் மண் அடுப்புகள் விற்பனைக்காகக் கொண்டு வரப்படுகிறது.

இதன் முன்னோட்டமாக விதவிதமான தினுசுகளில் மண்அடுப்புகள் வியாசர் பாடிக்கு விற்பனைக்கு வந்துள்ளன. இங்கிருந்து சில்லறை வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். சில்லறை விலையில் 60 ரூபா வரை விற்கப்படுகிறது. சமையல் எரிவாயு மற்றும் மின்சார அடுப்பில் சமைத்தால் வராத சுவை மண் சட்டியில் செய்தால் வரும். இதில் சமைத்தால் நோய் கூட எளிதில் நம்மை அண்டாது. இங்குள்ள சில நட்சத்திர ஹோட்டல்களில் கூட புதுமை என்ற பெயரில் மண் பாத்திரங்களில் சமைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். பாரம்பரியமும் சுவையும் கொண்டதால் தான் இன்னும் எங்கள் பிழைப்பு நடந்து கொண்டிருக்கிறது என மண் அடுப்பு வியாபாரி திருமலை என்பவர் தெரிவித்தார்.

## கள்ள நோட்டுக்களை புழக்கத்தில் விடும் பாகிஸ்தான் உளவுத்துறையினர்

பாகிஸ்தானிய உளவுத்துறை ஐ.எஸ்.ஐ. இந்தியாவுக்குள் கள்ள ரூபா நோட்டுக்களை புழக்கத்தில் விடும் சதித்திட்டத்தை சீக்கிய தீவிரவாத அமைப்பு ஒன்றின் மூலம் முயன்ற விடயம் அம்பலமாகியுள்ளது. கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட இரு சீக்கிய தீவிரவாத அமைப்பினரை விசாரணை செய்த போது இந்த விபரம் தெரியவந்துள்ளது.




நீண்டகாலமாக செயற்படாமல் உறங்கு நிலையில் இருந்த சீக்கிய தீவிரவாத அமைப்பு பாபர் கல்சா இன்டர்நேஷனல் (பி.கே.ஐ.) சமீப நாட்களில் மீண்டும் புத்துயிர் பெறுவதன் பின்னணியில் பாகிஸ்தானிய உளவுத்துறை இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி சீக்கிய பொற்கோவில் தாக்குதலுக்கு உத்தரவிட்ட காலங்களில் இவ் இயக்கம் பிரபலமாக இருந்தது.

சமீப நாட்களில் இந்த இயக்கம் மீண்டும் தமது நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது அவதானிக்கப்பட்டது. தீவிர கண்காணிப்பின்பின் கடந்த வியாழக்கிழமை மாலை சரப்ரீட் சிங், ஜஸ்விந்தர் சிங் என்ற இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தற்போது விசாரணை வளையத்துக்குள் உள்ளனர். இவர்களிடம் விசாரணை நடத்தியபோது, பாகிஸ்தானிய உளவுத்துறை இந்திய கள்ள ரூபா நோட்டுக்களை இவர்களிடம் நேபாளத்தில் வைத்துக் கொடுத்ததாக தெரிய வருகின்றது.

நேபாளத்தில் கிடைத்த கள்ள நோட்டுக்களை, ஜலந்தர் பகுதியில் புழக்கத்தில் விடுவதற்கு உள்ளூர் வர்த்தகர் ஒருவரைப் பயன்படுத்தி வந்த தகவலும்தெரியவந்துள்ளது. கடந்த ஒக்டோபர் 12 ஆம் திகதி இவர்கள் வெடிப்பொருள் கடத்துவதாக தகவல் கிடைத்து, இவர்களைப் பின்தொடர்ந்தது இந்திய உளவுப்பிரிவு. ஜம்மு-காஷ்மீரில் இருந்து ரயிலில் பயணம் செய்து கைது செய்தார்கள். அப்போது இவர்களை சோதனை செய்ததில், இவர்களிடம் வெடிப்பொருள் ஏதும் இருக்கவில்லை என்பதால், விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர். மீண்டும் கடந்த வியாழன் கள்ள நோட்டுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். அதன் பின்னரே இவர்கள் பி.கே.ஐ. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற விபரமும் தெரியவந்துள்ளது.

# சூடான் போராட்டத் தலைவர் சுட்டுக் கொலை



அரசுக்கு எதிராகப் போராடும் போராளி இயக்கத்தின் பிரதான தலைவரை யுத்த முனையில் கொன்றுவிட்டதாக நேற்று முன்தினம் சூடான் இராணுவம் அறிவித்துள்ளது.

யுத்தம் நடந்துகொண்டிருந்த இடத்தில் இயக்கத்தின் தலைவர் இருப்பதைத் தெரிந்துகொண்டு அந்த இடத்தைச் சுற்றி வளைத்து தாக்கியதாகவும், முற்றுகைக்குள் சிக்கிய அனைவரும் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களில் இயக்கத்தில் தலைவரின் உடலும் அடையாளம் காணப்பட்டுள்ளது எனவும் அறிவித்துள்ளது.

கொல்லப்பட்ட தலைவரின் பெயர் கலீல் இப்ராஹிம். ஜெம் என்ற விடுதலை இயக்கத்தின் தலைவர் இவர். வடக்கு கோர்டோபான் மாநிலத்தில் இராணுவத்துக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது இந்த விடுதலை இயக்கம்.

2003ஆம் ஆண்டில் இருந்து யுத்தம் நடைபெற்ற நிலையில், 2009ஆம் ஆண்டு ஐ.நா.வின் கணிப்பின்படி யுத்தத்தில் சுமார் 3 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். 2.7 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இராணுவம் பொது மக்களைக் கொன்ற குற்றச்சாட்டும் உள்ளது. ஜெம் இயக்கம் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு வயது குறைந்த ஆட்களை வலுக்கட்டாயமாக படையில் சேர்த்த குற்றச்சாட்டும் உள்ளது.

# படகு மூழ்கியதில் 38 பேர் பலி

கியுபாவின் கிழக்குக் கடற்பிராந்தியத்தில் படகு ஒன்று மூழ்கியதில் 38 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஹெய்ட்டியிலிருந்து புறப்பட்டவர்களே இந்த அனர்த்தத்துக்கு இலக்கானதாக தகவல்கள் குறிப்பிடுகின்றன.

சுமார் 87 பேர் பாதுகாப்பாக உயிருடன் மீட்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருவதாக கூறப்படுகின்றது. அதிகளவு பயணிகள் படகில் ஏற்றிச் செல்லப்பட்டமையால் இந்த அனர்த்தம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தப் பிராந்தியத்தில் அடிக்கடி படகுகள் மூழ்கி விபத்துக்கள் இடம்பெறுகின்றமை குறிப்-பிடத்தக்கது.

# கிறிஸ்மஸ் தினத்தில் மோதல்; 70 பேர் பலி

நைஜீரியாவின் வடக்குப்பகுதியில் போகோஹராம் என்ற பழமைவாத முஸ்லிம் பிரிவினர் அந்த மகாணத்தில் இஸ்லாமிய ஷரியத் சட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே இராணுவத்துக்கும் இவர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வரும். இந்நிலையில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு தினத்தில் தேவாலயங்களைக் குறிவைத்து இஸ்லாமிய பழமைவாத அமைப்பினர் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர். நாட்டின் வடக்குப் பகுதி நகரான மடல்லாவுக்கு அருகில் உள்ள செயிண்ட் தெரசா தேவாலயத்தில் சக்தி வாய்ந்த குண்டு முதலில் வெடித்தது. இதில் 27 பேர் உயிரிழந்தனர். அவர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியது. இங்கு இடம்பெற்ற மோதலில் 4 இராணுவ வீரர்கள் உட்பட 70 பேர் கொல்லப்பட்டனர்.

# கிறிஸ்மஸ் நாளில் சோகத்தில் பிலிப்பைன்ஸ் மக்கள்

(மணிலா)

உலகம் முழுவதும் நேற்று மகிழ்ச்சியுடன் கிறிஸ்மஸைக் கொண்டாடிய போது பிலிப்பைன்ஸில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கிறிஸ்மஸ் தினத்துக்கான உணவைப்பெற நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.


பிலிப்பைன்ஸில் சமீபத்தில் வாஷி சூறாவளி அடித்ததில் பெரு வெள்ளம் ஏற்பட்டு நாட்டின் தென்பகுதி தீவான மிண்டானா மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. அத்தீவில் உள்ள ககயான் டி ஓரா மற்றும் இலிகான் ஆகிய இரு துறை முகங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

இந்த வெள்ளத்தில் 2000 பேர் பலியாயினர், 1000இற்கும் மேற்பட்டோர் காணாமற்போயினர். 69 ஆயிரம் பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மொத்தம் மூன்று இலட்சத்து 28 ஆயிரம் பேர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். டிக்கிலான் கிராமத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டோர் போக 422 பேர் தப்பிப் பிழைத்துள்ளனர். இக்கிராமத்தில் நேற்றுமுன்தினம் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி உணவைப் பெறுவதற்காக மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.



# பின்லாந்துத் துறைமுகத்தில் தற்செயலாக சிக்கிய ஆயுதக் கப்பல்



பிரிட்டிஷ் கொடியுடன் பயணிக்கும் சரக்குக் கப்பல் ஒன்றில் இருந்து 160 டன் வெடிப்பொருட்களையும், 69 தரையிலிருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைகளையும் பின்லாந்து நாட்டு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இந்தக் கப்பலில் பிரிட்டிஸ் கொடி பறந்தாலும், கப்பலின் நடவடிக்கைகள் மர்மமானதாகவே உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. கப்பல் ஆயுதங்களுடன் சீனா செல்கின்றது என்ற விபரம் கப்பலில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் இருந்து தெரிகின்றது.

ஆனால், இந்த அயுதங்களைப் பெற்றுக்கொள்ளவது யார் என்ற விபரங்கள் ஏதும் சரக்குக் கப்பல் பதிவுகளில் இல்லை. இதேவேளை அவை எங்கிருந்து வருகின்றன என்ற விபரமும் ஆவணங்களில் இல்லை.

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட கப்பலின் பெயர் Thor Liberty. கப்பலின் சமீபத்தைய நடமாட்டங்கள் தொடர்பான லாயிட்ஸ் கப்பல் பதிவுகளில் இருந்து, இக்கப்பல் கடந்த 13ஆம் திகதி ஜேர்மனியின் எம்டன் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுள்ளது. அங்கிருந்து பயணித்து, முதலாவது நிறுத்தமாக கொட்கா துறைமுகத்தின் நிறுத்தப்பட்டது. இது தெற்கு பின்லாந்திலுள்ள பிரபலமற்ற துறைமுகம்.

கொட்கா துறைமுகம் ஐரோப்பா-தென்கிழக்காசியா கப்பல் வர்த்தகத்தில் பிரயாணப்பாதையில் பொருட்களை மாற்றுவதற்காகச் செயற்படும் இடம். அதாவது இந்த இடத்தில் சுங்கச் சோதனைகள் அதிகம் இருக்காது. ஒரு நாட்டில் இருந்து மூன்றாவது நாட்டுக்குச் செல்லும் பொருட்களை இத்துறைமுகத்தில் கப்பல்களிடையே பரிமாற்றம் செய்வார்கள்.

இந்தத் துறைமுகத்திலிந்து கப்பல் நங்கூரத்தை கப்பலுடன் இணைக்கும் சங்கிலிகள் ஏற்ற வேண்டி இருந்து. இவற்றைக் கப்பலில் ஏற்றிய பின்லாந்து துறைமுக ஊழியர்கள், சங்கிலிகளை கப்பலில் பொருத்தமான பகுதியில் வைப்பதற்காக இடம் தேடியபோது, கப்பலில் பாரல்களில் பிக்ரிக் அமிலம், மற்றும் ஏவுகணைகளும் இருப்பதைக கண்டிருக்கிறார்கள். உடனடியாக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதால், கப்பல் பின்லாந்து துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. சாம் ஏவுகணைகள் எங்கே போகின்றன என்பது தொடர்பான விசாரணைகள் தொடங்கியுள்ளன. இதுவரை எந்த நாடும் இதற்கு உரிமை கோரவில்லை.

# பதிவிறக்கப் பெட்டகம்

எழுபதாண்டுக் கால இதழியல் வரலாற்றில் பிற்காலச் சுதேசமித்திரன் தொடங்கிக் கலைமகள், மணிக்கொடி உள்ளிட்டு சுபமங்களா வரை முக்கியமான இலக்கிய இதழ்கள் தொகுப்புகளாகி உள்ளன. இந்த இலக்கிய இதழ்களில் வெளிவந்த படைப்புகள் தொகுக்கப்பட்டு இந்தக் காகிதத் தலையணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. சில இதழ்கள் ஒரு தொகுதியாயும் சில இரண்டிலிருந்து நான்கு தொகுதிகளாகவும் வந்திருக்கின்றன. 1000 பக்கங்களைப் பேரெல்லையாகவும் 200 பக்கங்களைச் சிற்றெல்லையாகவும் கொண்டுள்ளன. அதாவது இரண்டு செங்கல் அளவு பெரிதாகவும், மொசைக் கல் அளவு சிறிதாகவும் எனப் பல்வேறு அளவுகளில் இவை உருவாகியுள்ளன. செங்கற்களே மிக அதிகம்.

இதுவரை தொகுப்புகளாகி இருக்கும் இதழ்கள் சுமார் 20 இருக்கும். 'போகிற போக்கைப் பார்த்தால், தினத்தந்திக்குக் கூடத் தொகுப்பு வந்துவிடும்' என்றார் பிரபஞ்சன் ஒரு சமயம். அந்த அளவுக்கு ஆயாசம் ஏற்படுகிறது.

- பழ. அதியமான்

சரியாக ஐந்தரை மணிக்கு முகப்பு அறிவிப்பு முடிந்ததும் அடுத்த ஸ்டுடியோவிலிருந்து, விசு 'ஆல் இண்டியா ரேடியோ..... செய்திகள்..... வாசிப்பது பூர்ணம் விஸ்வநாதன்..' என்று தன் கணீரென்ற குரலில் ஆரம்பிப்பார். அதற்குமுன் நாங்கள் இடையிலுள்ள கண்ணாடிச்சுவர் வழி கட்டைவிரலை உயர்த்தி 'Best of Luck!' சொல்லுவோம். நாடகத்துக்குத் தேவையான பிரதிகளை காப்பி எடுத்து Copywriter பஞ்சாபகேசன் தயாராக வைத்திருப்பார். இவரை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் பஞ்சாபகேசன் என்ற பெயரிலல்ல. இவர் தான் நடிகர் அர்விந்த் ஸ்வாமியின் தந்தையும், மெட்டி ஒலி போன்ற பல சீரி யல்களில் அப்பா வேஷத்தில் நடிப்பவருமான டெல்லி குமார் அவர்கள். ஸ்டுடியோ கடிகாரத்தின் மேல் இருக்கும் ON AIR என்ற சிவப்பு விளக்கு எரியும்போது, உலகத்தில் அனைவருமே தூக்கத்தை மறந்து, என் நாடகத்தைக் கேட்க ரேடியோ பெட்டி முன் உட்கார்ந்திருப்பதாகக் கற்பனை செய்துகொள்வேன். ரேடியோ நாடகத்தில் பார்த்துப் படிப்பதால், வசனங்களை மனப்பாடம் செய்ய வேண்டிய தேவையில்லை. ஒரு பக்கத்திலிருந்து அடுத்த பக்கத்துக்குப் போகும்போது, குனியாமல் பேசிக்கொண்டே மைக்கில் பேப்பர் சலசலப்பு சத்தமில்லாமல் கீழே நழுவவிடுவது ஒரு கலை.

- பாரதி மணி

நாடகம் என்பது சமுதாயச் செயல். சமூக நிகழ்வுகளினால் பாதிக்கப்படுகின்ற கலைஞனின் பார்வையில், அவை கருத்துகளை முதன்மைப்படுத்துவதற்கான வடிவங்களை ஏற்று, அவனையும் சமூகத்தையும் அடையாளப்படுத்தும் கலை அனுபவங்களாகின்றன.

நாடகம் என்பது சமுதாயச் செயல் என ஏற்றுக்கொண்டால், அது, குடும்ப, சமூக அரசியல், அதிகாரம் பற்றிய விமர்சனமாக இருப்பதனின்றும் தவிர்க்க முடியாது. ஷேக்ஸ்பியருடைய சரித்திர நாடகங்கள், சில துன்பவியல் நாடகங்கள் போன்றவற்றை இந்த அடிப்படையில் ஆராயலாம். ஆனால், நாடக ஆசிரியன் முன் வைக்கும் விமர்சனம், எப்படி வெறும் கோஷங்களாக இருந்து விடாமல், கலை வடிவங்களாகி, நாடக ஆசிரியனைக் கலைஞனாக அடையாளப்படுத்துகின்றன என்பதுதான் முக்கியம்.

- இந்திரா பார்த்தசாரதி

என்னுடைய தமிழ்ப் புத்தகங்கள் அதிக விலையாக உள்ளன என்று பரவலாக ஒரு கருத்து உள்ளது. ஆனால், ஒரு கிலோ வஞ்சிரம் மீனை 400 ரூ. கொடுத்து எந்தப் புகாரும் இல்லாமல் வாங்குகிறோம். ஆனால் ராஸ லீலா 400 ரூ. என்றால் அடி வயிற்றில் புளியைக் கரைக்கிறது. இது என்ன தர்க்கம் என்றே புரியவில்லை. காகிதம், அச்சு போன்ற செலவுகள் கற்பனை செய்ய முடியாத உயரத்தில் போய் நின்று கொண்டிருக்கின்றன.

சுஜாதாவின் புத்தகங்களே 1000 பிரதிகள்தான் விற்கின்றன என்கிற போது என்னுடைய புத்தகங்களைப் பற்றி என்ன சொல்வது? தமிழர்களுக்குப் புத்தகங்கள் வாங்கிப் பழக்கமில்லை. 2000 ஆண்டுகளுக்கு முன்பே புலவர்களையெல்லாம் ராஜாக்களிடம் பிச்சை எடுக்க வைத்த சமூகம்தானே இந்தத் தமிழ்ச் சமூகம்? இப்படித்தான் இருக்கும்.

- சாரு நிவேதிதா

....இப்படியாக முழுமூச்சுடன் இயங்கிவந்தவர்கள் திடீரெனச் சோர்ந்துபோனவர்களாக மாறியது எதனால் என்ற கேள்வியைப் பலர் எழுப்பியதுண்டு. சுமார் ஆறு ஆண்டுகளுக்குள் பல சாதனைகள் செய்த 'படிகள்' நின்றதன் காரணம் என்ன என்று நாங்கள் தீவிரமாகப் பரிசீலிக்கவில்லை என்பதுதான் உண்மை. இன்று 'படிகள்' நின்றதன் காரணங்களை ஆராய்வது வெறும் academic exercise ஆகப் போகலாம். பத்திரிகை ஏன் நின்றது என்று நண்பர்கள் சிலர் கேட்டதுண்டு என்றாலும் பலர் 'படிகள்' நின்று போனதைப் பெரிதாகக் கருதவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. சிறுபத்திரிகைகளின் தர்மப்படியே அது நிகழ்ந்துள்ளதாகவும் எடுத்துக்கொள்ளலாம். பத்திரிகைகள் வரும் போகும். மீண்டும் வேறு பெயரில் வரும். இதில் ஆச்சரியப்படுவதற்கோ கவலைப்படுவதற்கோ ஒன்றுமில்லை என்பது பலரின் பார்வையாக இருக்கலாம்.

- ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன்

**காணி மற்றும் காணி அபிவிருத்தி, மீள்குடியேற்ற அமைச்சுக்களின் வரவு செலவு திட்ட குழு நிலை விவாதத்தில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் ஆற்றிய உரை**

# நிலவுடமை அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நலனுக்காக காணியற்ற மக்களின் வாழ்வோடு விளையாட முடியாது



இலங்கையில் காணிப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள், வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்களே. அதிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்ளைச் சேர்ந்த மக்களே உச்சமான பாதிப்பைச் சந்தித்துள்ளனர்.

இவர்களிற் பலரிடம் தற்போது தங்கள காணிகளுக்குரிய உறுதிகளோ, உரித்தாவணங்களோ இல்லை. அவற்றைப் பெறக்கூடிய நிலையும் பலருக்கில்லை.

போரின் காரணமாக, இந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் தங்களிடமிருந்த ஆவணங்களைத் தவறவிட்டுள்ளனர். உயிரையே காப்பாற்ற முடியாத நிலையில் இருந்த மக்களால் எவ்வாறு ஆவணங்களையும் பொருட்களையும் காப்பாற்ற முடியும்? என நினைத்துப் பாருங்கள். இழந்துபோன ஆவணங்களை மீளப் பெறக்கூடிய சூழலும் இல்லை. யுத்தத்தினால், இந்தப் பகுதிகளிலிருந்த அரச திணைக்களங்கள் அழிவடைந்ததனால் அவற்றிலிருந்த ஆவணங்களும் அழிந்து விட்டன.

ஆகவே, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள மக்கள் போரின் பாதிப்புகளைத் தொடரந்து இப்போது காணிப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். போரினால் பாதிககப்பட்ட மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கு காணியே அடிப்படைத் தேவையாக உள்ளது.

வீடமைப்புத் திட்டம் தொடக்கம் வாழ்வாதார உதவிகள் என அனைத்தையும் பெறுவதற்கு காணி அத்தியாவசியமாகும் ஆனால், காணி இருந்தாலும் அதற்குரிய ஆவணங்கள் இல்லாத நிலையிலேயே அங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் உள்ளனர். இதனால் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளைப் பெறமுடியாத நிலைக்கு அந்த மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மக்களின் இந்த அவல நிலையை அங்கே நேரிலே பார்த்தறிந்தவன் நான். ஆகையால் தான் சொல்கிறேன், அங்குள்ள மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டியது மிக மிக முக்கியமாகும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலே 2/3 க்கும் அதிகமான தொகையினர் அரசினால் வழங்கப்பட்ட காணிகளிலேயே குடியிருந்தும் விவசாயம் செய்தும் வருகின்றனர்.

தென்பகுதியிலிருந்து வன்முறை காரணமாக இடம்பெயர்ந்து கொழும்பிலிருந்தும் மலையகத்திலிருந்து வன்னிக்கு வந்த தமிழர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் அரச காணிகளில் குடியமர்த்தப்பட்டார்கள்.

இவர்கள் இந்தப் பிரதேசங்களில் மிக நீண்டகாலமாகவே இருக்கின்றபோதும் இவர்களிற் பலருக்கும் இதுவரையில் சான்றாதாரப் பத்திரங்களோ, உரித்து ஆவணங்களோ வழங்கப்படவில்லை.

இப்போது இவர்களுக்கு முறையான உரித்தாவணங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது.

இதைவிட பெருமளவானோர் காணியில்லாத நிலையில் இருக்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 12,438 குடும்பங்கள் தமக்குக் காணியில்லாதவர்கள் பதிவு செய்துள்ளனர்.

இதேபோல கிளிநொச்சி மாவட்டத்தில் 14,750 குடும்பங்கள் காணியற்ற நிலையில் உள்ளனர். இவர்கள் காணிக்காக விண்ணப்பித்திருக்கின்றனர். இதேவேளை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 2,000 இற்கும் மேற்பட்டவர்கள் அரச காணிகளில் குடியேறியுள்ளனர். இவர்களுக்கான உரித்தாவணங்கள் விசாரணை செய்து வழங்கப்படவேண்டியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் முஸ்லிம் மக்கள் உட்பட 7,500 குடும்பங்கள் காணியற்ற நிலையில் இருக்கின்றனர்.

இந்த மக்களின் நிலமையை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். இவர்கள் போரினாலும் பாதிக்கப்பட்டு உதவித் திட்டங்களைப் பெறமுடியாத நிலையிலும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில்தான் நாம் அரசாங்கம் முன்னெடுத்த "மண்ணின் மகிமைத்" திட்டத்தை வரவேற்கிறோம்.

நாட்டின் அபிவிருத்தியும் பிரதேசத்தின் அபிவிருத்தியும் வளங்களைப் பயனபடுத்துவதிலேயே தங்கியுள்ளது. எல்லாவற்றுக்கும் அடிப்படையானது முதலில் நிலமாகும். காணியற்ற நிலையில் பெருந்தொகையான மக்கள் இருக்கிறார்கள். இதேவேளை பராமரிப்பின்றிய நிலையில் பெருமளவு காணிகள் உள்ளன. இது அடிப்படையில் ஒரு முரணாகும். யாருடைய காணியும் பராமரிக்கப்பட வேண்டியது அவசியமாகும் இல்லையெனில் அது அபிவிருத்திக்கும் அயல் மனிதர்களுடைய வாழ்க்கைக்கும் குறைபாட்டையே ஏற்படுத்தும்.

எனவேதான் ஒரு முறையான திட்டத்தின் மூலம் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமென்று கேட்கின்றோம். காணிப் பற்றாக்குறை மட்டுமல்ல காணி உரித்தாளர்களிடையே ஏற்படுகின்ற பிணக்குகளின் காரணமாகவும் ஆயிரக்கணக்கானோர் நீதிமன்றங்களுக்கு அலைந்து கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பிணக்குக்குரிய காணிகள் அபிவிருத்தி செய்யமுடியாத நிலையில் உள்ளமையை அவதானிக்கலாம்.

ஆகவே, காணி தொடர்பான தீர்வுகள் அவசியமானது.

இலங்கையில் ஏனைய மாகாணங்களில் நடைமுறைப்படுத்துவது போன்று காணியற்றவர்களின் விபரங்களை அரச வர்தமானி மூலமோ அல்லது பத்திரிகைகள் மூலமோ அறிவித்துத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலமே காணியற்றவர்களின் சரியான விபரங்கள் திரட்டக் கூடியதாக இருக்கும்.

பொதுவாக வடக்கு மாகாணத்தில் குறிப்பாக மீள்குடியேற்ற மாவட்டங்களில் வருடாந்த உத்தரவுப்பத்திரம் மூலம் வழங்கப்பட்ட காணிகளுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி அளிப்புப் பத்திரம் வழங்க துரிதநடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

அரச காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் பொது ஸ்தாபனங்கள், வணக்கத் தலங்களுக்கு நீண்டகாலக் குத்தகை அடிபபடையில் வழங்கப்பட்ட காணிகளுக்கு குத்தகைப்பத்திரம் இதுவரை வழங்கப்படவில்லை ஆகவே இவற்றை வழஙக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பொதுவாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பல காணிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் உள்ளது. சில காணிகளில் அத்துமீறி மக்கள் நீண்ட காலமாக குடியிருந்துள்ளனர். இவர்களுக்கு இக்காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் அபிவிருத்தி செய்யப்படாத ஏனைய மத்தியவகுப்புத் திட்டக் காணிகளை காணியற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் காணியற்றோர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகாண முடியும்.

குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில கிராமங்கள் ஏற்று நீர்ப்பாசன முறைமூலம் (Lift Irrigation) பயிர் செய்வதற்கு வழங்கப்பட்டது. எனவே, இப்பகுதிகளுக்கு ஏற்று நீர்ப்பாசன் முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இப்பகுதிக் காணிகள் அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

பொதுவாக மீள்குடியேற்ற மாவட்டங்களில் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதிருக்கும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேணடும்.

காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் இப்பகுதியிலுள்ள காணிகளை சுற்றாடல் சமநிலையைப் பேணும் விதத்திலும் நிரநதர உபயோகத்திற்கும் வழிவகுக்கும் வகையில் திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும்.

இதைத் தவிர பெருமளவு தொகையில் காணிகளை வைத்திருக்கும் நிலவுடமையாளர்களின் தனிப்பட்ட நலனுக்காக ஆயிரக்கணக்கான காணியற்ற மக்களின் வாழ்வோடு விளையாடமுடியாது.

தமிழ்தேசிய முலாம் பூசப்பட்ட அரசியலில் ஈடுபடும் மூத்த அரசியல்வாதிகள் பலருக்கும் பல ஏக்கர் கணக்கில் காணிகள் உண்டு. இவற்றை அவர்கள் தமக்கு வாக்களித்த காணியற்ற மக்களுக்கே பகிர்ந்தளிக்கத் தயாரில்லாத நிலையில் இருக்கின்றனர். இவர்களே தங்களையும் பாதுகாத்து தங்களைப் போன்ற நில முதலாளிகளையும் பாதுகாக்க முற்படுகின்றனர்.

இவர்களுக்கு காணியற்ற ஏழை மக்களின் வாழ்வைப்பற்றி கரிசனையே கிடையாது என்பதை வன்மையாக இந்த மன்றிலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

"மண்ணின் மகிமை" திட்டத்தின் கீழ் இதற்கு இலகுவாக தீர்வு காணக் கூடியதாக இருக்கும் ஆகவே அத்திட்டம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்துகிறேன்.

வடக்கின் மீள்குடியேற்ற விடயங்கள் தொடர்பாகவும் இந்த அவையின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

போர் முடிந்து 2 ½ ஆண்டுகள் கடந்த பின்னரும் மீள்குடியேற்றப் பிரச்சினைகள் தொடர்ந்தபடியே உள்ளன.

இன்னமும் நலன்புரிநிலையங்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியிருக்கும் நிலையே தொடர்கிறது.

பல கிராமங்கள் போர்ச்சூழலில் இருந்து இன்னும் விடுபடாத நிலையே காணப்படுகிறது.

அகதிவாழ்வு இன்னும் முடியவில்லை. ஆகவே, மீள்குடியேற்றம் என்பது இன்னும் குறைநிலையிலேயே உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

போர் முடிந்த பின்னர் மீண்டும் தங்களுடைய சொந்த ஊர்களுக்குப் போய் விடலாமென எல்லா மக்களும் நம்பினர். இந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறு அரசாங்கமும் செயற்படத் தொடங்கியது. மீள்குடியேற்றத்தைச் சாத்தியப் படுத்துவதல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் நிறையப் பங்குண்டு. ஜனாதிபதி அவர்களின் பணிப்பின் பேரில் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ அவர்களும் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் மீள்குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தனர்.

அந்த நிகழ்ச்சி ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகவே இருந்தது. 2 ½ ஆண்டுகளுக்குள் 70% இற்கும் அதிகமானோர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது சாதனையே. ஆனால் ஏனைய மக்களும் மிக விரைவாக தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவேண்டும். மற்றவர்களைப் போல தாங்களும் தங்களுடைய சொந்த ஊர்களில் வாழவேண்டுமென்று அகதி நிலையிலிருக்கும் மக்கள் விரும்புகிறார்கள்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த அகதிகள் என்ற நிலை இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தொடரப்போகிறது? மீளக் குடியேறவேண்டிய மக்களை உரிய இடங்களில் குடியமர்த்த வேண்டிய நடவடிக்கையை நாம் விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

சில நடைமுறைப் பிரச்சினைகளை நாமும் அறிவோம். வடக்குக் கிழக்கிலே கண்ணிவெடி அகற்றவேண்டிய பிரதேசங்களாக 20% மான நிலப்பகுதி உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இடங்களில் தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடபகுதியில் மட்டும் ஐந்துக்கும் மேற்பட்ட கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் வெளிநாட்டு நிறுவனங்களும் அடங்கும்.

10,000 இற்கு மேற்பட்ட பணியாளர்கள் தினமும் வெடிபொருட்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

முற்றாக வெடிபொருள் அபாயத்தை நீக்கினாலே அந்தந்தப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியேற அனுமதிக்க முடியும் என்பதை நான் அறிவேன். இது தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகளில் நானும் பங்கேற்றவன் என்பதனால் இது பற்றிய விசயங்கள் எனக்குத் தெரியும்.

கிளாலியில் அண்மையில் இத்தகைய நெருக்கடிகளைச் சந்தித்து அவற்றை வெற்றிகொண்டு மீள்குடியேற்றத்தைச் சாத்தியப்படுத்தியுள்ளோம். இதற்காக சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆனால் மீள்குடியேறிய மக்களின் நியாயமான உணர்வுகளுக்கு நாம் மதிப்பளிக்கவேண்டும். இந்த வகையில் யாழ்பபாணம் உள்ளிட்ட அனைத்து இடங்களில் முஸ்லிம் மக்களின் மீள்குடி யேற்றத்திற்கு நாம் முழுமையான ஆதரவை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல அங்கே வலி. வடக்கு உட்பட பல பிரதேசங்களில் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டிய நிலையில் பச்சிலைப்பள்ளியில் முகமாலை, வேம்பொடுகேணி, இத்தாவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளும் கரைச்சியில் கிளிநொச்சி நகரை அண்மித்த பரவிப்பாஞ்சான் கிராம அலுவலர் பிரிவும், கண்டாவளையில் ஆனையிறவுப் பகுதியிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளன.

கிளிநொச்சியில் 900 பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளனர். முல்லைத்தீவில் 2003 குடும்பங்களைச் சேர்ந்த 6610 பேர் தொடர்ந்தும் மெனிக்பாம் முகாமில் தங்கியுள்ளனர். இதைத் தவிர 57779 குடும்பங்களைச் சேர்ந்த 28717 இற்கு மேற்பட்டோர் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் குடியேற்றப்பட வேண்டியுள்ளனர். வவுனியாவில் 3000 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வேணடியுள்ளனர்.

முக்கியமாக மீள்குடியேற்ற மக்களுக்கான முழுமைப்படுத்தப்பட்ட உதவித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மீள்குடியேறிய மக்கள் மீள் நிலைக்குத் திரும்பும்வரை ஒரு குறிப்பட்ட எல்லைவரை உதவிகளையும் ஊக்குவிப்புக்களையும் அரசாங்கம் செய்ய வேண்டும்.

மீள்குடியேற்ற மக்களில் விவசாயம், கடற்றொழில் உள்ளிட்ட தங்களின் வாழ்வாதாரத் தொழிற்றுறைகளில் விருத்தி செய்வதற்கான உதவிகளைச் செய்வதும் மீள்குடியேற்ற அமைச்சின் பொறுப்பாகும்.

# சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்து ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரை

## சிறுபான்மைகள் உரிமைகள் குழு வரவேற்பு

(கொழும்பு)

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பாக முக்கியமான சில விடயங்கள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதனை வரவேற்பதாக சிறுபான்மையினர் உரிமைகளுக்கான அனைத்துலக குழு தெரிவித்துள்ளது.

மொழி, காணி உரிமைகள், மீள்குடியமர்வு, கட்டாயமாக காணாமற்போனவர்கள், பெண்களின் பாதுகாப்பு, முஸ்லிம்களின் இடம்பெயர்வு போன்ற விடயங்களில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இந்த அமைப்பு வரவேற்றுள்ளது.

இந்த அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற அதேவேளை, ஆணைக் குழுவினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்துவதையும் உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளது.

போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்த குற்றச் சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்துவது பற்றி ஆணைக்குழு எந்தக் கருத் தையும் முன்வைக்கவில்லை.

அரசு மற்றும் இராணுவத் தரப்பின் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை பக்கச்சார்புடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட மோசமான மனிதஉரிமை மீறல்கள் குறித்து, இந்த அறிக்கையில் எதுவும் சுட்டிக்காட்டப் படவில்லை.

போர் முடிவுக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும் இலங்கையில் ஆட்கள் காணாமற்போகும் சம்பவங் களும், சித்திரவதைகள் மற்றும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகளும் தொடர்கின்றன.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நீதியையும், பொறுப்புக் கூறுவதையும் உறுதிப்படுத்துவதற்கு அரசு தவறியுள்ளது. போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றச்செயல்கள் குறித்து, அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு, ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைகள் குறித்து ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை கலந்துரையாடல்களை ஆரம் பிக்க வேண்டும் என்றும் சிறு பான்மையினர் உரிமைகளுக்கான அனைத்துலக குழு அழைப்பு விடுத்துள்ளது.

# காணாமற்போன சிறுவன் வீடு திரும்பினான்



(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சிறிகுமரவேல் ரத்னாஸ் (வயது-13) என்ற சிறுவன் காணாமற் போனதாக தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் வீடு திரும்பியுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவன் நேற்று முன் தினம் தனது சகோதரிக்கு உணவு கொண்டு செல்லும் போது காணாமற் போனதாக சிறுவனின் தாயாரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும் காணாமல் போன அன்றைய தினம் இரவே சிறுவன் வீடு திரும்பியதாக தாயார் பொலிஸ் நிலையத்திற்குத் தெரிவித்துள்ளார்.

இச்சிறுவன் கொடிகாமம் செல்லும் பேருந்தில் தவறுதலாக ஏறிச்சென்றதாக தனது தயாரிடம் கூறியதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எப்.எஸ்)

# தனியார் பேருந்துகளில் பயணச்சீட்டை கட்டாயம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு முதல் யாழ். மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் அனைத்து தனியார் பஸ் வண்டிகளில் பயணிப்பவர்களுக்கு பயணச் சிட்டை வழங்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரில் இருந்து சேவையில் ஈடுபடும் தனியார் பயணிகள் பேருந்து சேவைகளின் போது சிட்டை வழங்கும் நடைமுறை சரியாகப் பின்பற்றப்படுவதில்லை என்று யாழ். பொலிஸாருக்கு கிடைத்திருக்கும் முறைப்பாட்டை அடுத்து இந் நடை முறை கண்டிப்புடன் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம் கூட யாழ்.நகரில் இருந்து புறநகர்ப் பகுதிக்கும் நகருக்குள்ளேயும் பயணிக்கும் மினி பஸ்களில் பயணிக்கும் பய ணிகளுக்கு பயணச்சிட்டை வழங்கும் நடவடிக்கை சரியாகப் பின் பற்றப்படுவது இல்லை என்றும் பயணிகள் தெரிவிக்கின்றன. (பா)

## இப்படியும் பெறுபேறு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கு விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய மாணவருக்கு, கலைப்பிரிவில் பெறுபேறுகளை அனுப்பியுள்ளது பரீட்சைத் திணைக்களம்.

கடவத்தைப் பகுதியைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கே இவ்வாறு பரீட்சைப் பெறுபேறு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# திலான் சமரவீர நிதான ஆட்டம் இலங்கை அணி கௌரவமான நிலை



(தென்னாபிரிக்கா)

தென்னாபிரிக்க அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல்நாள் ஆட்டத்தில் 7 விக்கெட் இழப்பிற்கு 289 ஓட்டங்களைப் பெற்றது.

டேர்பன் நகரில் நடைபெறும் இப்போட்டியில் திலான் சமரவீர 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார்.

35 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல் விக்கெட்டை இழந்த இலங்கை அணி, 162 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது 5 ஆவது விக்கெட்டையும் இழந்து நெருக்கடிக்குள்ளானது.

பிரசன்ன ஜயவர்தன (12), குமார் சங்கக்கார (0) மஹேல ஜயவர்தன (31) ஏஞ்சலோ மத்தியுஸ் (30) ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அணித்தலைவர் திலகரட்ன தில்ஷான் 47 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும் 6 ஆவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டத்தில் திலான் சமர்வீரவும் தினேஷ் சந்திமாலும் (58) 111 ஓட்டங்களைப் பெற்றனர். திசேர பெரேரா 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணிக்கு அதிக அச்சுறுத்தலாக விளங்கிய தென்னாபிரிக்க பந்துவீச்சாளர் அறிமுக வீரரான டி லாஞ்ச் ஆவார். இவர் 60 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

21 வயதான டி லாஞ்ச், காயமடைந்த வேர்னன் பிலாந்தருக்குப் பதிலாக இறுதி நேரத்தில் அணியில் சேர்க்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மோர்ன் மோர்கெல் 55 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் இம்ரான் தாஹிர் 87 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## சூறாவளியாகி மாறிய தாழமுக்கம்

(கொழும்பு)

நாட்டை அண்மித்த வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் சூறாவளியாக மாற்றமடைந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையின் பிரகாரம் மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய கடலை அண்மித்த பகுதிகளில் கடும் காற்றுடன் மழையும் பெய்யக்கூடுமெனவும்

மீனவர்கள் கடலுக்குச் செல்வது பாதுகாப்பற்றது எனவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக எதிர்வு கூறும் மத்திய நிலையம் மேலும் எச்சரித்துள்ளது.

## பெற்றோல்....

கொண்டிருந்தவேளை திடீரென மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக் கொண்டது. இந்தத் தீ அருகிலுள்ள மோட்டார் சைக்கிளிலும் பற்றியதனால் அதுவும் எரிந்து நாசமானது. இதன்போது மோட்டார் சைக்கிளின் உரிமை யாளர்கள் இருவரும் கடுமையான எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கைதடி நாவற்குழியைச் சேர்ந்த கே.மனோகரன் (வயது-62), கரவெட்டி மேற்கைச் சேர்ந்த பி.பழனிமலை (வயது- 59) ஆகிய இருவருமே எரிகாயங்களுக்கு உள்ளாகியதுடன், இவர்கள் பயணம் செய்த சபாரி, சி-90 ஆகிய மோட்டார் சைக்கிள்களே எரிந்து நாசமானவையாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இதேவேளை, பெற்றோல் நிரப்பும் பம்பிக்கு அருகே தீப் பற்றிக் கொண்ட மோட்டார் சைக்கிளை சற்றுத் தள்ளிவிட்டதால் பெற்றோல் நிலையத்தில் ஏற்படவிருந்த பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. (137, எப்.எஸ்)

## மீள்குடியேறிய....

மக்கள் எடுத்துக் கூறினர். இவற்றை ஆராய்ந்த அமைச்சர் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடி எதிர்வரும் 10 நாட்களுக்குள் உரிய தீர்வு களைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதிமொழி அளித்தார்.

இதேபோன்று வலிதெற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட் பட்ட மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளையும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார். இம் மக்கள் சந்திப்பின் போது பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் அமைப்பாளர் ஜீவன் ஆகியோர் உடனிருந்தனர். இதன் போது பெருமளவி லான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது

## இனப்பிரச்சினைக்கு...

கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தடை ஏற்படுத்தி வருகின்றன.

நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கும் யோசனைத் திட்டத்திற்கு சகல அரசியல் கட்சிகளும் முதலில் இணக்கம் தெரிவித்திருந்தன.

மேற்குலக நாடுகளின் அழுத்தம் காரணமாக குறித்த கட்சிகள் தற்போது நாடாளு மன்றத் தெரிவுக்குழு அமைக்கும் யோசனைத் திட்டத்திற்கு எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டுமென சில வெளிநாட்டு சக்திகள் முயற்சி மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏனைய கட்சிகளும் வடக்கில் வெற்றியீட்டியிருந்தன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு-கூட்டமைப்பு.....

கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளாக மாறியுள்ளதாகவும் இதனால் எந்தப் பயனும் இல்லை எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்துக்கொண்டு பேச்சு வார்த்தை நடத்துமாறு அரசாங்கம் கூறுகின்ற போதிலும், 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க அரசாங்கம் மறுப்பு தெரிவித்துள்ளது. அத்துடன் வடக்கு, கிழக்கை இணைக்கவும் அரசாங்கம் இணங்கவில்லை. இவ்வாறான நிலைமையில் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் பயனில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருத்தப்பட்ட...

அறிவித்துள்ளார். முன்னதாக வெளியான உயர்தரப் பெறுபேற்றின் மாவட்ட தேசிய நிலைகள் இரத்துச் செய்யப்பட்டு உள்ளதாக அவர் அறிவித் திருந்தார்.

பரீட்சைத் திணைக்களத்தின் இந்தக் குளறுபடியான செயலை இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், வடமாகாண கல்வி அபிவிருத்திக்குழு என்பன தமது உண்மையான கஷ்டத்தை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விசேட கைதிகளுக்கு...

உருவாக்கப்பட்ட உலகின் மிக நீண்ட வாழ்த்து அட்டை அண்மையில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட போது ஜனாதிபதி, பொது மன்னிப்பு வழங்குவது குறித்து தெரிவித்துள்ளார். பொது மன்னிப்பு மூலம் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் விடுதலை செய்யப்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் நம்பப்படுகிறது.


இந்தநிலையில் கைதிகள் தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

2002 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் விசேட கைதிகளுக்கு மன்னிப்பு வழங் கப்பட்டது. எனினும் அதன் பின்னர் ஜனாதிபதியின் விசேட அதிகாரத்தைக் கொண்டு எவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வில்லை.

எவ்வாறெனினும், போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க பரிந்துரை செய்ய வேண்டாம் என்று ஜனாதிபதி சிறைச்சாலை அதிகாரிகளிடம் கோரியுள்ளார்.

# இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ள இன, மத பேதமின்றி செயற்படவேண்டும்

## பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக இன மற்றும் மத பேதமின்றி மக்கள் தயாராக இருக்கவேண்டும் என பிரதமர் தி.மு. ஜயரட்ன தெரிவித்தார்.

காத்தான்குடியில் நேற்று நடைபெற்ற தேசிய பாதுகாப்பு தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர்,

இரண்டு வகையாக அனர்த்தங்கள் இடம்பெற்று வருகின்றன. அதில் ஒன்றுதான் யுத்தமாகும். அதை ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ எமது நாட்டில் இல்லாமல் செய்ததன் மூலம் நாம் அனைவரும் நிம்மதியாக வாழ்கின்றோம்.

இது நமது பூமி, நமது தேசம் என்ற சிந்தனை எமக்குள்ளது. நாம் சந்தித்த இயற்கை அனர்த்தங்களில் மிக பெரிய அனர்த்தம் சுனாமியாகும் அதில் இழந்த சொத்துக்கள் எமது அரசாங்கத்தினால் ஈடுசெய்யப்பட்டுள்ளன.

அதற்கான சவாலையும் எமது அரசாங்கம் வெற்றி கொண்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவுகொண்ட சுனாமியை அடுத்து அனர்த்தங்கள தொடர்பாக முன்கூட்டி செயற்படுவதற்கான முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்றின் தேவை உணரப்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு, சூறாவளி மற்றும் மண் சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களை குறைத்து கொள்வதற்கு முறையான பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

அமைச்சர் மகிந்த அமரவீர, கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன, பிரதியமைச்சர்களான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் துலிப் விஜேசேகர ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

# பதிவு செய்யாத பாதுகாப்புச் சேவை ஐந்து நிறுவனங்கள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

உரிய முறையில் பதிவு செய்யாது பாதுகாப்பு சேவை வழங்கிய ஐந்து நிறுவனங்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கையை தொடங்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அனுமதியில்லாத தனியார் பாதுகாப்பு நிறுவனங்களைப் பற்றி பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கும் வகையில் பொது மக்களுக்கு விழிப்புணர்வு உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடக்கியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பல்வேறு நிறங்களில், சில சமயம் இராணுவ சீருடை போலவுள்ள பல வகையான சீருடைகள் பயன்படுத்தபடுவதால் பாதுகாப்பு பிரச்சினைகள் தோன்றின.

எனவே தனியார் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த பாதுகாப்பு ஊழியர்களுக்கென ஒரு வகை சீருடை மார்ச் 9, 2011 இல் அறிமுகம் செய்யப்பட்டது.

தற்போது சகல தனியார் பாதுகாப்பு நிறுவனங்களும் இந்த சீருடையை பயன்படுத்துகின்றன. பாதுகாப்பு அமைச்சில் பதிவு செயயாமல் பாதுகாப்பு சேவையில் ஈடுப்பட்ட ஐந்து நிறுவனங்களின மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கடல் அலையில் அள்ளுண்டு கூட்டுறவு பரிசோதகர் பலி

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தார். மட்டக்களப்பு கூட்டுறவு சங்க பரிசோதகரான 51 வயதுடைய வே.மகேந்திரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

தமது உறவினரின் வீட்டிற்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த சம்பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தார். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தங்கச் சங்கிலியை அபகரித்தவர் பொதுமக்களிடம் பிடிபட்டார்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்ற பெண் ஒருவரிடமிருந்து தங்கச்சங்கிலியை அபகரிக்க முயன்ற திருடன் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் குருநகர் பகுதியில் இடம்பெற்றது. வீதியில் சென்ற பெண்ணொருவரைப் பின்தொடர்ந்து சென்ற குறித்த இளைஞன் ரூபா 90 ஆயிரம் பெறுமதியான 2 பவுண் தங்கச் சங்கிலியைப் பறித்துக் கொண்டு ஓடியுள்ளான். அவ்வேளை அந்தப் பெண் எழுப்பிய அவலக்குரலினால் அங்கு நின்ற பொதுமக்கள் அந்தத் திருடனை மடக்கிப் பிடித்து நையப் புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் குருநகர் பிரதேச உணவகமொன்றில் வேலை செய்பவர் எனவும், நுவரெலியா நவகமகொட பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (எப்.எஸ்)

# சிகிச்சைக்குச் சென்ற பெண் மயங்கி விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

வைத்திய சிகிச்சைக்கெனச் சென்ற பெண் ஒருவர் மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று நண்பகல் 1.00 மணியளவில் தெல்லிப்பளை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அளவெட்டி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஜெயராணி ஜெயக்குமார் (வயது - 47) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

ஏற்கனவே இருந்த நோய் ஒனறுக்காக மருந்து எடுக்கச்சென்ற சமயம் இவர் மயங்கி விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

# மாதகல் கொலை வழக்கு விடுதலையானார் எதிரி

(திருநெல்வேலி)

மாதகல் கொலை வழக்கில் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து எதிரி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 27 ஆம் திகதி தாமோதரம் பிள்ளை முருகேசு என்பவரை அவரது மகளின் கணவரான சுப்பிரமணியம் குலேந்திரன் என்பவர் மண்வெட்டியால் தாக்கிக் கொலை செய்ததாகவும், முருகேசுவின் மகன் சண்முகராசாவுக்குக் காயம் விளைவித்ததாகவும் எதிரி மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

தோட்டக்காணிக்கு நீர் பாய்ச்சுவது சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினையால் இக் கொலை இடம்பெற்றதாக வழக்கு இடம்பெற்றது. யாழ். மேல் நீதிமன்றத்தில் இக்கொலை வழக்கு விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா முன்னிலையில் நடைபெற்ற நிலையில் எதிரி கொலைக் குற்றச் சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார். முருகேசு சண்முகராசாவுக்குக் காயம் விளைவித்தது நிரூபிக்கப்பட்டுள்ளமையால் எதிரிக்கு ஏழு வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 6மாத கடுழியச் சிறைத்தண்டனையும், ஐயாயிரம ரூபா அபராதமும், அபராதம் கட்டத்தவறினால் மூன்று மாதகால சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார். அரச தரப்பில் ஆரம்பத்தில் அரச சட்டவாதி திருமதி பி.ஞானசேகரம் பின்னர் அரச சட்டவாதி வி.திருக்குமரனும ஆஜரானார்கள். எதிரி தரப்பில் சட்டத்தர ணிகள் என்.ஸ்ரீகாந்தா, கே.பீ.எஸ். வரதராஜா ஆகியோர் ஆஜராகினார்கள். (137)

# வியாபார நிறுவனத்தின் பெயரில் குடாநாட்டில் பண மோசடி

சிங்கர் விற்பனை நிலையத்தின் பெயரைப் பயன்படுத்தி குடாநாட்டில் மோசடி செய்யப்படுவதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சிங்கர் நிறுவனத்தின் வேறு மாவட்ட முகவர் ஒருவர் விளம்பரத்தினை மாற்றி இவ்வாறு மோசடியில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மோசடியில் தொடர்புடையவர்கள் விளம்பரத்தில் ஒரு கூப்பனைக் குறிப்பிட்டு சிங்கரின் எந்தக் கிளை நிலையத்திலும் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் என கூறுகின்றனர். இவ்வாறு விளம்பரத்தை விநியோகிக்கும் மோசடிக் குழு அங்குள்ள பொருட்களுக்கு சலுகை உள்ளதாகக் கூறி 3000 ரூபா முற்பணம் பெறுகின்றனர். இதனால் பல சிங்கர் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் குறித்து சிங்கர் நிறுவன உயர் அதிகாரி தினமுரசுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்படி சம்பவத்துக்கும் சிங்கர் நிறுவனத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை எனவும் பொருள் கொடுககாமல் எச்சந்தர்ப்பத்திலும் காசு முற்பணமாக வாங்கியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதனால் வாடிக்கையாளர்கள் குறித்த விளம்பர மோசடிக்காரர் குறித்து அவதானமாக இருக்குமாறும் கேட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக யாழ். பொலிஸார் புலன் விசாரணை மேற்கொண்டு வருவதுடன், சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் உடனடியாகப் பொலிஸ் நிலையத்திற்குத் தெரியப்படுத்துமாறும் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (எப்.எஸ்)

# தூக்கில் தொங்கிய நிலையில் இருவரின் சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தூக்கில் தொங்கிய நிலையில் வயோதிபர் மற்றும் குடும்பஸ்தர ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நல்லூர் மூத்த விநாயகர் வீதியைச் சேர்ந்த சின்னத்துரை செல்வரட்ணம் (வயது - 60) என்பவரின் சடலமும் நேற்று மீட்கப்பட்டுள்ளது. இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் பிள்ளைகள் வெளிநாடு சென்றமையால் கவனிப்பாரற்று தனிமையில் வாழ்ந்து வந்துள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் ஹேமரத்தனாவின் தலைமையில் விசாரணை நடைபெறுகின்றது. சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே வேளை, கிளிநொச்சி திருநகர் வீதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் தூக்கி லிட்டு இறந்த நிலையில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரியாலையைச் சொந்த இடமாகக் கொண்ட சுப்பிரமணியம் இரவீந்திரன் (வயது - 49) என்பவரே தூக் கில் தொங்கிய நிலையில் இறந் துள்ளார்.

திருமணம் செய்து குடும்பத்தைப் பிரிந்து வாழ்ந்துவந்த இவர் திருநகர் வீதியில் உள்ள வியாபாரநிலையம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த வியாபார நிலையத்தினர் நெருங்கிய உறவினர் ஒருவரின் பிறந்தநாள் நிகழ்வுக்குச் சென்று மறுநாள் காலை வியாபார நிலையத்திற்குத் திரும்பிய போது குறித்த நபர் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்து காணப்பட்டுள்ளார். உரிய இடத்திற்கு விரைந்த கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற கொண்டுவருகின்றனர். (29,77,எப்எஸ்)

# உல்லாசப் பயணி கொலை சந்தேகநபர் பொலிஸில் சரண்



அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை என்ற இடத்தில் உள்ள களியாட்ட ஓய்வு விடுதியொன்றில் நத்தார் பிறப்பு நள்ளிரவில் பிரிட்டிஷ் பிரஜையொருவர் கொல்லப்பட்ட சம்பவத்தின முக்கிய சந்தேக நபர் பொலிஸில் சரணடைநதுள்ளார். தங்காலை பிரதேச சபைத் தலைவரான சம்பத் விதான பத்திரண (வயது-24) பொலிஸில் சரணடைந்தவுடன் கைதுசெய்யபபட்டதாக பொலிஸ் பேச்சாளர் எஸ்.பி அஜித் ரோஹன தெரிவித்தார். தங்காலை பிரதேச சபையைச் சேர்ந்த வாகன சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் நேற்று முன்தினம் மாலை சரணடைந்தவர்கள் நீதவான் முன்னிலையில் அடையாள அணிவகுப்பில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கூரிய ஆயுதமொன்றால தாக்கியே பிரிட்டிஷ் சுற்றுலா பயணி கொலலப்பட்டதாக கூறிய பொலிஸார் கொல்லப்பட்டவரின் சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த சம்பவத்தில கொல்லப்பட்டவருடன் இருந்த ரஷ்யப் பெண்மணி காயமடைந்து தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.